வடக்கின் முதல் நாளிதழ் - Estd 1959
Reg. No. : P. 1632
விலை ரூ. 30/=

# ஈழநாடு
Eelanadu ඊළනාඩු



மாருதி
Money Exchange (Pvt) Ltd.
இல.285, காலி வீதி, வெள்ளவத்தை, கொழும்பு 06
T.P: 011 236 2086
இவ் அனைத்து சேவைகளையும் இங்கு பெற்றுக் கொள்ளலாம்.
இல.390, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
T.P: 021 221 4433
076 284 4443
MoneyGram - மணிகிராம் பணப்பரிமாற்றம்
Ria - றியா பணப்பரிமாற்றம்
Western Union - வெஸ்ரேன் யூனியன் பணப்பரிவர்த்தனை

Email : news@eelanadu.lk | மலர் : 04 | 30.05.2023 செவ்வாய்க்கிழமை | இதழ் : 172 | பக்கங்கள் : 16

## யாழ். நகரில் விபத்து; இளைஞர் உயிரிழப்பு

யாழ்ப்பாணம், மே 30

மோட்டார் சைக்கிளில் சென்று கொண்டிருந்த வரை லொறி மோதித் தள்ளிய விபத்தில் இளைஞர் ஒருவர் உயிரிழந்தார்.

யாழ்ப்பாணம் நகரின் காங்கேசன்துறை வீதியில் முட்டாசு கடைச் சந்திக்கு அண்மையாக நேற்று முற்பகல் 11. 45 மணியளவில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

இதில், தென்மராட்சி - மீசாலையை சேர்ந்த இராஜ ரட்ணம் அபிதாஸ் (வயது 29) என்ற இளைஞரே உயிரிழந்தார்.

இந்த விபத்துக் குறித்து மேலும் அறிய வருவதாவது - பணி ஒன்றுக்காக நிறுவனம்

15

## யாழ்., மட்டு., கிளிநொச்சியில் உணவு பாதுகாப்பின்மை உச்சம்!

### ஐ. நா. அமைப்புகள் கூட்டாக எச்சரிக்கை

கொழும்பு, மே 30

யாழ்ப்பாணம், கிளிநொச்சி, மட்டக்களப்பு, மன்னார், வவுனியா மற்றும் நுவரெலியா மாவட்டங்களில் உணவு பாதுகாப்பின்மை இன்னமும் உயர் மட்டத்திலேயே உள்ளது என்று ஐ. நா. அமைப்புகள் கூட்டாக எச்சரித்துள்ளன.

இதேநேரம், நாட்டின் அனைத்து மாகாணங்களிலும் உணவுப் பாதுகாப்பில் முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது என்றும் ஐக்கிய நாடுகள் சபையின் உலக உணவு திட்டம், உணவு விவசாய ஸ்தாபனம் ஆகியவை தெரிவித்துள் ளன.

2023 பெப்ரவரி, மார்ச் மாதங்களில் முன்னெடுக்கப்பட்ட உணவு பயிர் பாதுகாப்பு மதிப்பீடுகளின் அடிப் படையில் இந்த விடயம் வெளிப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

நாட்டில் தற்போது 39 இலட்சம் மக்கள் (17 வீதமானவர்கள்) மிதமான - மோசமான உணவுப் பாதுகாப்பின்மையை

15

# வடக்கில் புதிதாக விகாரைகள் கட்டுவதை நிறுத்த வேண்டும்



### நயினாதீவு ரஜமகா விகாராதிபதி தெரிவிப்பு

யாழ்ப்பாணம், மே 30

வடக்கு மாகாணத்தில் புதிதாக விகாரைகள் நிர்மாணிக்கப்படுவது நிறுத்தப்பட வேண்டும். பௌத்தர்கள் இல்லாத - தமிழர்கள் வாழும் பகுதியில் புதிய விகாரைகள் அவசியமற்றவை - இவ்வாறு நயினாதீவு புராதன ரஜமஹா விகாரை விகாரதிபதி நவந்தகல பதுமகீர்த்தி திஸ்ஸ நாயக்க தேரர் தெரிவித்துள்ளார்.

'டான்' தொலைக்காட்சி குழுமத்தின் சிங்கள மொழி ஒளிபரப்பு சேவையான 'யாழ்' அலைவரிசைக்கு அவர் அளித்த நேர்காணலிலேயே மேற்கண்டவாறு தெரிவித்தார். தமிழ் பிரதேசங்களில் புதிதாக எந்த விகாரையும்

15

## யாத்திரை சென்றவர் உயிரிழப்பு

மட்டக்களப்பு, மே 30

செல்வச்சந்நிதியிலிருந்து கதிர்காமத்துக்கு யாத்திரை சென்ற முதிய யாத்திரிகர் ஒருவர் திடீரென மயங்கி வீழ்ந்து உயிரிழந்தார்.

மட்டக்களப்பு மாமாங்கத்திலிருந்து நேற்று காலை யாத்திரையை தொடர முற்பட்ட போதே அந்த யாத்திரிகர் உயிரிழந்தார். யாழ்ப்பாணம் கைதடியை சேர்ந்த கே. சிவலிங்கம் (வயது 70 ) என்பவரே இவ்வாறு

15

## இந்தியாவின் புதிய ஒழுங்கை ஈழத்தமிழர் பின்பற்ற நேரும்!

### ஜனநாயக போராளிகள் இப்படி அறிக்கை

யாழ்ப்பாணம், மே 30

தமிழ் மக்களின் இருப்பை அச்சுறுத்தும் இனவாத நடவடிக்கைகள் தொடர்ந்தால்

இந்திய - பசுபிக் பிராந்தியத்தில் ஒரு புதிய ஒழுங்கை நோக்கி இந்தியா பயணிக்கிறது. அந்தப் ஒழுங்கைப் பற்றிக் கொள்ள வேண்டிய யதார்த்தமான தேவை ஈழத்தமிழர்களுக்கு எழும் - என்று ஜனநாயக போராளிகள் கட்சி தெரிவித்துள்ளது.

அந்தக் கட்சியின் ஊடகப் பேச்சாளர் க. துளசி நேற்று திங்கட்கிழமை

15

## கிளிநொச்சி விபத்தில் குடும்பஸ்தர் உயிரிழப்பு

கிளிநொச்சி, மே 30

கப் ரக வாகனமும் மோட்டார் சைக்கிளும் நேருக்கு நேர் மோதிய தில் குடும்பஸ்தர் ஒருவர் உயிரிழந்தார்.

நேற்று பிற்பகல் 4 மணியளவில் ஏ- 35 வீதியில் தர்மபுரத்துக்கு அண்மையாக இடம் பெற்ற இந்த விபத்தில், தர்மபுரத்தை சேர்ந்த தியாகராசா சஞ்சீவன் (வயது 36) என்ற 4 பிள்ளைகளின் தந்தையே இவ்வாறு உயிரிழந்தார்.

விபத்தில் காயமடைந்த அவர்

15

## அரசாங்கத்தின் முடிவுகளில் திருப்தி அடைய முடியவில்லை

### நாமல் ராஜபக்ஷ எம். பி.



கொழும்பு, மே 30

அரசாங்கம் எடுக்கும் சில முடிவுகள் குறித்து திருப்தி யடைய முடியவில்லை. எனினும், ஜனாதிபதியுடன் பேச்சு நடத்தி நாட்டுக்கு பாதிப்பு ஏற்படாத வகையில் தீர்மானங்களை நடைமுறைப்படுத்த முடியும் என்று சிறீலங்கா பொது ஜன பெரமுனவின் பாராளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ

15

## கைபேசி உட்பட 843 பொருட்களின் இறக்குமதி கட்டுப்பாடுகள் நீக்கம்!

கொழும்பு, மே 30

கைபேசி, குளிர்சாதனப் பெட்டிகள், மின்விசிறிகள், பழ வகைகள் உட்பட 843 வகையான பொருட்கள் மீதான இறக்குமதி கட்டுப்பாட்டை இலங்கை மத்திய வங்கி நீக்கியுள்ளது.

இந்த பொருட்களை இறக்குமதி செய்யும் போது பொருட்களின் மொத்த மதிப்புக்கு சமமான பண வரம்பை நீக்கியுள்ளது. நாட்டில் ஏற்பட்ட டொலர் நெருக்கடியை அடுத்து இந்தத் திட்டத்தை மத்திய வங்கி அறிமுகப்படுத்தியிருந்தது.

பணவரம்பு தளர்த்தப்பட்டமையை தொடர்ந்து இறக்குமதிக்கு கட்டுப்பாடு விதிக்கப்பட்ட கைபேசிகள், குளிர்சாதன பெட்டிகள், மின் விசிறிகள், பழங்கள் உள்ளிட்ட பல அத்தியாவசியப் பொருட்கள் உள்ளிட்ட 843

15

## மத நல்லிணக்கத்தை பாதுகாக்க விசேட பொலிஸ் பிரிவு நிறுவப்படும்

### ஜனாதிபதி ரணில் அறிவிப்பு

கொழும்பு, மே 30

மத நல்லிணக்கத்தை சீர்குலைக்கும் குழுக்களை விசாரித்து நடவடிக்கை எடுப்பதற்காக விசேட பொலிஸ் பிரிவை நிறுவ ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தீர்மானித்துள்ளார்.

நாட்டின் பல இடங்களில் இருந்தும் இவ்வாறான குழுக்கள் உருவாகி வருகின்றன. அவற்றின் நடவடிக்கைகள் அரசாங்கத்தை சங்கடப்படுத்தும் வகையில் திட்டமிடப்பட்டவை. அவை தற்செயலான செயல்பாடுகள் அல்ல என்று ஜனாதிபதிக்கு கிடைத்த புலனாய்வு தகவலின் பிரகாரம் இந்தத் துரித முடிவு எடுக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில் உரிய புலனாய்வு பிரிவினருக்கு கிடைத்த தகவலையடுத்து, பொலிஸ் மா

15

# இப்படியும் நடக்கிறது...!

அந்தக் காலத்தில் யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்புக்கு வேலைக்கு போகின்றவர்கள் மாதத்தில் ஒருதடவைதான் லீவில் வீட்டுக்கு வருவார்கள். அநேகமாக அரச தனியார் துறைகளில் பணியாற்றுகின்ற அனைவருமே இப்படித் தான். சிலர் மூன்று, நான்கு மாதங்களுக்கு ஒருதடவைதான் யாழ்ப் பாணம் வருவர்கள். அவர்களின் குடும்பங்கள் யாழ்ப்பாணத்தில் தான் இருக்கும். அதனால் மாதந்தோறும் சம்பளம் எடுத்ததும் அதனை மணிஓடரில் அனுப்பிவிடுவார்கள்.

அதனால்தான், யாழ்ப்பாண வாழ்க்கையை 'மணி ஓடர் வாழ்க்கை' என்று அந்தக் காலத்தில் சொல்வார்கள்.

ஒரு பிரிட்டன் கொம்பனியில் பணியாற்றிய ஒரு யாழ்ப்பாணத்தவர், அடிக்கடி லீவு எடுத்துக் கொண்டு யாழ்ப்பாணம் வந்துபோவார். அவர் லீவு எடுப்பதற்காக யாழ்ப்பாணத்திலிருந்து ஒரு தந்தியை அனுப்பச் சொல்லிவிட்டு அதனைக் காட்டியே அவர் லீவு எடுப்பதை வழக்கமாகக் கொண்டிருந்தார்.

அப்படி ஒரு தடவை லீவு எடுப்பதற்காக உறவினர் ஒருவர் இறந்துவிட்டார் என்று தந்தி கொடுக்கச் சொல்லியிருந்தார்.

தந்தியுடன் அந்த பிரிட்டிஷ் கொம்பனியின் அதிகாரியிடம் போய் தந்தியை காட்டியிருக்கிறார்.

அவர் இவரை சமாதானப் படுத்தியவாறு, அனுதாபம் சொல்லியிருக்கிறார். உடனே இவர், இறந்தவர் தனக்கு மிக நெருக்கமானவர் அல்ல என்றும் தூரத்து உறவினர்தான் எனவும் சொல்லியிருக்கிறார். அதாவது அவரின் இறப்பு தனக்கு பெரிய கவலைக்குரியது அல்ல என்பது போல.

அதற்கு அந்த பிரிட்டிஷ் அதிகாரி சொன்னாராம், "நோ.. நோ... இந்த ஒருவரின் இறப்புக்காக மட்டும் நான் இரங்கல் தெரிவிக்கவில்லை. நீர் இப்போது அநேகமாக அநாதையாகியிருப்பீர்.. அதற்குத்தான் உமக்கு இரங்கல் தெரிவித்தேன்", என்று.

இவர் ஒவ்வொரு தடவையும் லீவு எடுக்கும்போது ஒவ்வொருவராக இறக்கப் பண்ணியதால் அவர் அநாதையாகி விட்டார் என்று அவரின் அதிகாரி நினைத்துவிட்டாரோ அல்லது இவரின் 'திருகுதாளம்' தெரிந்து நக்கல் அடித்தாரோ தெரியவில்லை.

இந்தக் கதைதான் அந்தச் செய்தியை படித்தபோது எனக்கு ஞாபகத்துக்கு வந்தது.

அரசாங்கம் முன்மொழிந்துள்ள அனைவரையும் நினைவு கூருவதற்கான பொது நினைவுத் தூபி விவகாரத்தில் தமிழ் மக்கள் தேசியக் கூட்டணியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான சி.வி. விக்னேஸ்வரன் தெரிவித்த கருத்தையும் அதனையடுத்து சிலர் அதற்கு எதிர்வினையாற்றிய செய்தியையும் படிக்க முடிந்தது.

'நாட்டில் நீடித்த ஆயுத மோதல்கள், அரசியல் அமைதியின்மை அல்லது குடியியல் குழப்பங்களால் உயிரிழந்த பொதுமக்கள், முப்படையினர் மற்றும் பொலிஸார், போராளிகள் உள்ளிட்ட அனைவரையும் நினைவுகூர கொழும்பில் பொது நினைவுத்தூபி அமைக்க ஜனாதிபதி சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் அளித் துள்ளது.'

இந்தச் செய்தியை அறிந்ததும்,

தமிழ்த் தேசிய அரசியலில் உள்ள தலைவர்கள் எல்லோருமே அதற்கு எதிர்வினையாற்றி வருகின்றனர்.

இந்த நேரத்தில் இதுகுறித்து கருத்துத் தெரிவித்துள்ள விக்னேஸ்வரன், 'என்னைப் பொறுத்தவரையில் தென்னிலங்கையில் ஏற்பட்டுள்ள மாற்றமாகவே பார்க்கின்றேன். இத்தனை ஆண்டுகளாக தமிழ் மக்களின் பிரச்னைகள் தொடர்பில் எதிர்மறையாகச் சிந்தித்தவர்கள் தற்போது மாறுபட்டுச் சிந்திக்கின்றர்கள். இந்தச் சிந்தனையானது இதயசுத்தியுடனானதாக இருக்க வேண்டும்' என்று தெரிவித்திருக்கிறார்.

அதாவது, இறந்த தமிழ் மக்களுக்காகவும் பொதுத்தூபி அமைக்க வேண்டும் என்ற சிந்தனையை வரவேற்றிருக்கிறார்.

அவரின் இந்த அறிக்கையை படித்ததும், அவரை முதல்வராக்கிய தமிழரசு கட்சியே அவரை அந்த பதவியிலிருந்து வெளியேற்ற முயன்றபோது அவருக்கு ஆதரவாக இளைஞர்கள் பொங்கி எழுந்த காட்சி மனக் கண்ணில் வந்து மறைந்தது. அவரை நம்பிக்கொண்டே தமிழ் மக்கள் பேரவை உதயமாகியது.

அவரே தமிழ் தேசியத்தின் காவலனாகக் காட்சி தந்தார்.

இப்போது அவர், தான் யார் என்பதை தனது ஒவ்வொரு நடவடிக்கை ஊடாகவும் தினமும் தன்னை வெளிப்படுத்தி வருகின்றார்.

இதனால் அவரை 'தேசியத் தலைவராகப்' பார்த்தவர்களே இப்போது அவரை விமர்சனம் செய்யத் தொடங்கியிருக்கின்றனர்.

லீவு எடுப்பதற்காக உறவினர்கள் இறந்துவிட்டனரெனத் தந்தி அடிப்பித்த அந்த யாழ்ப்பாணத் தமிழர் லீவு எடுப்பதற்காக பொய் சொன்னார். இந்தக் கதை ஏன் எனக்கு இப்போது ஞாபகத்துக்கு வந்தது என்பதை வாசகர்கள் புரிந்து கொண்டிருப்பார்கள் என்று நினைக்கின்றேன்.

- ஊர்க்குருவி

# ஆறுமுகன் தொண்டமான் நினைவு முத்திரை வெளியீடு

கொழும்பு, மே 30

இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் முன்னாள் தலைவரும் பொதுச் செயலாளருமான ஆறுமுகன் தொண்டமானின் நினைவாக ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க தலைமையில் விசேட நினைவு முத்திரை மற்றும் கடித உறை என்பன நேற்று திங்கட்கிழமை ஜனாதிபதி பணிமனையில் வெளியிடப்பட்டது.



வெகுசன ஊடகம் மற்றும் போக்குவரத்து அமைச்சர் பந்துல குணவர்தனவால் நினைவு முத்திரையும் கடித உறையும் ஜனாதிபதிக்கு வழங்கி வைக்கப்பட்டன.

இதன்போது, பிரதமர் தினேஷ் குணவர்தன, சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன, முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ச, முன்னாள் சபாநாயகர் கரு ஜயசூரிய, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தன் மற்றும் ஆறுமுகன் தொண்டமானின் மனைவி திருமதி ராஜலட்சுமி தொண்டமான் ஆகியோருக்கு நினைவு முத்திரையும் கடித உறையும் வழங்கப்பட்டது.

நீர் வழங்கல் மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு அபிவிருத்தி அமைச்சரும் இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் பொதுச் செயலாளருமான ஜீவன் தொண்டமான், கிழக்கு மாகாண ஆளுநரும் இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் தலைவருமான செந்தில் தொண்டமான், அமைச்சர்களான நிமல் சிறிபால டி சில்வா, கெஹெலிய ரம்புக்வெல, டக்ளஸ் தேவானந்தா, மகிந்த அமரவீர,நஸீர் அஹமட், மனுஷ நாணயக்கார, பாராளுமன்ற உறுப்பினர்களான வஜிர அபேவர்தன, மகிந்தானந்த அலுத்கமகே,சீ.பி ரத்னாயக்க, தபால் மா அதிபர் எஸ். ஆர். டபிள்யூ. எம். ஆர். பி சத்குமார மற்றும் ஆறுமுகன் தொண்டமானின் குடும்ப உறுப்பினர்கள் இந்நிகழ்வில் கலந்து கொண்டனர்.

## தங்கத்தின் விலை வீழ்ச்சி

கொழும்பு, மே 30

நாட்டில் தங்கத்தின் விலை நேற்று மேலும் குறைவடைந்ததாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதன்படி, கொழும்பு செட்டியார் தெருவில் தங்கச் சந்தையில்நேற்று '22 கரட்' ஒரு பவுண் தங்கத்தின் விலை ஒரு இலட்சத்து 50 ஆயிரத்து 800 ரூபாயாகக் குறைந்துள்ளது.

இதேவேளை, கடந்த வெள்ளிக்கிழமை ஒரு இலட்சத்து 65 ஆயிரம் ரூபாயாக இருந்த '24 கரட்' ஒரு பவுண் தங்கத்தின் விலை தற்போது ஒரு இலட்சத்து 63 ஆயிரம் ரூபாயாக குறைந்துள்ளது.

(ஐ)

## ஓ. எல். வினாத்தாள் திருத்துவதற்கு விண்ணப்பம் கோரப்பட்டுள்ளது!

கொழும்பு, மே 30

2022 க. பொ. த சாதாரண தரப் பரீட்சை வினாத்தாள்களை திருத்துவதற்கான விண்ணப்பங்களை பரீட்சைகள் திணைக்களம் நேற்று கோரியது.

வினாத்தாள்களை திருத்தும் பணியில் ஈடுபட விரும்பும் ஆசிரியர்கள் எதிர்வரும் ஜூன் 15ஆம் திகதிக்குள் தமது விண்ணப்பங்களை சமர்ப்பிக்க முடியும்.

பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் எச். ஜே. எம். சி. அமித் ஜயசுந்தர, தேசிய பணியாகக் கருதி இத்திட்டத்திற்கு ஆதரவளிக்குமாறு ஆசிரியர்களிடம் கோரிக்கை விடுத்தார்.

விண்ணப்பதாரர்கள் https://onlineexams.gov.lk/eic/ என்ற இணையத்தளத்தைப் பயன்படுத்தி விதிகளை வாசித்து விண்ணப்பங்களை செய்ய முடியும் என்றும் தெரிவிக்கப்பட்டது.

(ஐ)

## விதிகளை மீறிய தராசை பாவித்த 5 வியாபாரிகள்மீது நடவடிக்கை

யாழ்ப்பாணம், மே 30

அளவீட்டு அலகுகள் நியமங்கள் மற்றும் சேவைகள் திணைக்களத்தால் அங்கீகரிக்கப்படாத மற்றும் நடப்பாண்டில் முத்திரை பதிக்கப்படாத நிறுக்கும் கருவிகளை பயன்படுத்திய 5 வியாபாரிகளுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது.

யாழ். மாவட்ட செயலகத்தின் அளவீட்டு அலகுகள் நியமங்கள் மற்றும் சேவைகள் பிரிவின் உத்தியோகத்தர்களால் நேற்று சுன்னாகம், அச்சுவேலி பகுதியில் சோதனை மேற்கொள்ளப்பட்டது.

இதன்போது, அங்கீகரிக்கப்படாத, முத்திரை பதிக்கப்படாத நிறுக்கும் கருவிகளை பயன்படுத்திய 5 வியாபாரிகள் இனங்காணப்பட்டனர். இவர்கள் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது.

(ஐ)

# நிலையான கடன் பாதைக்கு திரும்ப சீர்திருத்தங்களை இலங்கை செய்யும்!

## நிதி இராஜாங்க அமைச்சர் செஹான்

கொழும்பு, மே 30

நிலையான கடன் பாதைக்கு திரும்புவதற்கு தேவையான சீர்திருத்தங்களை மேற்கொள்ள இலங்கை தொடர்ந்தும் அர்ப்பணிப்புடன் இருக்கும் என்று நிதி இராஜாங்க அமைச்சர் செஹான் சேமசிங்க தெரிவித்துள்ளார்.

பொருளாதாரத்தை நிலைநிறுத்தத் தேவையான கடன் மற்றும் வெளி சமத்துவமின்மைகளை நிவர்த்தி செய்வதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்கும் எனவும் தெரிவித்தார்.

ஆசிய அபிவிருத்தி வங்கியின் 350 மில்லியன் டொலர் விசேட கொள்கை அடிப்படையிலான கடனுக்கு நேற்று ஒப்புதல் அளித்ததையும் அவர் வரவேற்றுள்ளார்.

நிதி நெருக்கடியின் போது அடிப்படை சேவைகளை ஆதரிப்பதற்கும் வாழ்வாதாரத்தை நிலைநிறுத்தவும் ஆசிய அபிவிருத்தி வங்கி வழங்கிய அவசர உதவிகளை இலங்கை பெரிதும் மதிக்கிறது.

பொருளாதார ஸ்திரத்தன்மைக்காக இலங்கைக்கு வரவு - செலவுத் திட்ட ஆதரவை வழங்குவதற்காக 350 மில்லியன் அமெரிக்க டொலர்கள் விசேட கொள்கை அடிப்படையிலான கடனுதவிக்கு ஒப்புதல் அளித்துள்ளதாக ஆசிய அபிவிருத்தி வங்கி அறிவித்துள்ளது.

(ஐ)

ஈழநாடு
Eelanadu
30.05.2023 செவ்வாய்க்கிழமை
சோபகிருது வருடம், வைகாசி 16

**"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"**
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 205 2300

# சிறிய விடயங்களில் சிக்குப்பட்டு போதல்?

அனைவருக்குமான நினைவுத் தூபியை நிறுவும் விடயத்துக்கு தமிழ்த் தேசிய கட்சிகள் எதிர்ப்பு வெளியிட்டிருக்கின்றன. இன்னொருபுறம் நினைவுத் தூபி விடயத்தை முன்வைத்து ஒரு கட்சியை இன்னொரு கட்சி தாக்கும் விடயங்களும் இடம்பெறுகின்றன. இவ்வாறான விடயங்கள் தொடர்பில் முன்னரும் 'ஈழநாடு' எச்சரித்திருக்கின்றது. ஆனால், தமிழ்த் தேசிய கட்சிகளின் தலைவர்கள் என்போரோ எதனையும் செவிமடுக்க மாட்டோம் என்பதில் உறுதியாக இருக்கின்றனர்.

யுத்தத்துக்குப் பின்னரான கடந்த 14 வருடங்களில் தமிழ்த் தேசிய கட்சிகளின் கவனம் முழுவதும் இவ்வாறான சிறிய விடயங்களுக்குள்ளேயே சிக்கிக் கிடக்கின்றது. ஆனால், கடந்த 14 வருடங்களில் தமிழ் மக்களுக்கான அரசியல் தீர்வு விடயத்திலும் சரி - பாதிக்கப்பட்ட மக்களுக்கான நீதியை அடையும் விடயத்திலும் சரி - அரசாங்கம் எந்தவொரு முன்னேற்றத்தையும் இதுவரையில் நிரூபிக்கவில்லை. அரசாங்கத்தை கீழிறங்கி வரச் செய்யும் அணுகுமுறைகளில் தமிழ்த் தேசிய கட்சிகளால் வெற்றிபெறவும் முடியவில்லை. தங்கள் தோல்வியை மறைப்பதற்காக ஏனையவர்கள்மீது பழிபோடுவதை அனைவரும் சிறப்பாக முன்னெடுத்து வருகின்றனர்.

ஆனால், மறுபுறம் அரசாங்கமோ தொடர்ந்தும் பொறுப்புக்கூறும் விடயத்தைத் தட்டிக் கழித்துக் கொண்டு செல்லும் அதன் அணுகுமுறையிலிருந்து பின்வாங்கவில்லை. தமிழ் கட்சிகளின் சத்தங்களை ஒரு பொருட்டாகவே கருத்தில் கொள்ளவில்லை. இப்போதும், ஐ. நா. மனித உரிமைகள் பேரவைக்கும் சர்வதேச சமூகத்துக்கும் தந்திரோபாயமாகக் கதைகளை கூறிவருகின்றது. அவ்வாறு கதை சொல்வதன் மூலம் தங்களால் தப்பித்துக்கொள்ள முடியுமென்றே அரசாங்கம் கருதுகின்றது.

இவ்வாறானதொரு பின்புலத்தில் அனைவருக்குமான நினைவுத் தூபி என்னும் புதிய கதையொன்றை கூறி அது தொடர்பில் அரசியல் சர்ச்சைகளை ஏற்படுத்தியிருக்கின்றது. ஐ. நா. மனித உரிமைகள் பேரவையின் கூட்டத் தொடர் ஆரம்பிக்கவுள்ள நிலையில் இவ்வாறானதொரு சர்ச்சையை ஏற்படுத்தியிருக்கின்றது. பொறுப்புக்கூறல் விடயத்தில் பாதிக்கப்பட்ட மக்களின் நம்பிக்கையைப் பெறக்கூடியவாறான எந்தவொரு விடயத்தையும் முன்னெடுக்காத அரசாங்கம் யுத்தத்தில் உயிரிழந்தவர்களுக்கான நினைவுத் தூபி தொடர்பில் கதையொன்றை அவிழ்த்துவிட்டிருக்கின்றது. வழமைபோல் அதற்கு பின்னாலுள்ள தந்திரங்களை புரிந்துகொள்ளாமல் நினைவுத் தூபியை எவ்வாறு அமைப்பதென்று தமிழ்த் தேசிய கட்சிகளும் சிவில் சமூகக் குழுக்களும் தங்களுக்குள் விவாதிக்கின்றனர். சிங்கள ஆட்சியாளர்களின் எதிர்பார்ப்பும் இதுதான்.

ரணில் விக்கிரமசிங்க அதிகாரத்துக்கு வந்த நாளிலிருந்து பல விடயங்கள் பேசப்பட்டிருக்கின்றன. ஆனால், பேசப்பட்ட விடயங்களில் முன்னேற்றங்களைக் காண முடியவில்லை. தேசிய இனப்பிரச்னைக்கான அரசியல் தீர்வை காணப்போவதாகக் கூறப்பட்டது. பின்னர் 13ஆவது திருத்தச்சட்டத்தை அமுல்படுத்தப் போவதாக கூறப்பட்டது. இது தொடர்பில் தமிழ்த் தேசிய கட்சிகளுடன் பேச்சுகளும் நடைபெற்றன. இப்போது அனைவருக்குமான நினைவுத் தூபியென்னும் புதிய கதையொன்று கூறப்படுகின்றது. முன்னர் பேசப்பட்ட விடயங்களை முன்வைத்து தமிழ் கட்சிகள் தங்களுக்குள் விவாதித்துக் கொண்டன. இறுதியில் விவாதங்கள் அனைத்தும் விழலுக்கிறைத்த நீரானது. இப்போது, நினைவுத் தூபியை முன்வைத்து மீண்டும் தமிழ் கட்சிகள் தங்களுக்குள் விவாதித்துக் கொள்கின்றன.

சிங்கள ஆளும் வர்க்கம் போடும் தந்திரங்களுக்குள் கச்சிதமாக சிக்கிக் கொள்ளும் காரியத்தையே தமிழ்த் தேசிய கட்சிகள் திறம்பட முன்னெடுத்து வருகின்றன. இதனை அறிந்து செய்கின்றனரா அல்லது அறியாமல் செய்கின்றனரா?

# இலங்கை சிங்கள-பௌத்த நாடு இல்லையென 'அறகலய' அநீதியை நியாயப்படுத்தியது!

## நாமல் ராஜபக்ஷ எம். பி. சொல்கிறார்

கொழும்பு, மே 30

போராட்ட களத்தில் இலங்கை சிங்கள - பௌத்த நாடு அல்ல என்றார்கள். அநீதிகளைக்கூட நியாயப்படுத்தும் வகையிலான செயல்படுகள் அங்கு இடம்பெற்றன - என்று சிறீ லங்கா பொதுஜன பெரமுனவின் பாராளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ தெரிவித்தார்.

"எமது நாட்டின் கலாசார சீரழிவின் கேந்திர நிலையமாகவே 'அறகலய' (போராட்டம்) களம் செயல்பட்டது. மகிந்த ராஜபக்ஷ என்ற பெயரை சிதைப்பதற்கு முற்பட்டனர். அதனால்தான் அவர் விகாரைக்கு செல்வதைக்கூட நகைச்சுவையாக மாற்றியமைத்தனர்.

எனது தந்தையை (மகிந்த ராஜபக்ச) கிழட்டு மைனா என விமர்சிப்ப வர்கள், அவர்களின் பெற்றோரையும் கிழட்டு மைனா எனக் கூறும் காலம் வெகு தொலைவில் இல்லை என நான் கூறியிருந்தேன். அப்படியான சம்பவங்கள் தற்போது நடைபெற்று வருகின்றன.

இதனால்தான் அவ்வாறானவர்களை புனர்வாழ்வுக்கு உட்படுத்த வேண்டும் எனக் கூறியிருந்தேன். போராட்ட களத்தில் இலங்கை சிங்கள - பௌத்த நாடு அல்ல என்றார்கள். அநீதிகளைக்கூட நியாயப்படுத்தும் வகையிலான செயல்படுகள் அங்கு இடம்பெற்றன." என்றும் நாமல் எம். பி. கூறினார். (ஐ)

# வற்றாப்பளை கண்ணகை அம்மன் கடல் தீர்த்தம் எடுக்கும் விழா நேற்று!



முல்லைத்தீவு, மே 30

வரலாற்று புகழ்பெற்ற வற்றாப்பளை கண்ணகை அம்மன் ஆலய வருடாந்த பொங்கல் திருவிழாவின் கடல் தீர்த்தம் எடுக்கும் நிகழ்வு நேற்று சிறப்பாக நடைபெற்றது.

பாரம்பரிய முறைப்படி நடைபெற்ற இந்த நிகழ்வில், முதலில் முள்ளியவளை காட்டா விநாயகர் ஆலயத்தில் சிறப்பு பூசைகள் நடந்தன. தொடர்ந்து அம்மன் வழிபாடு நடந்தது. இதன் பின்னர், தீர்த்தக்குடம் பாரம்பரிய முறைப்படி முல்லைத்தீவு பெருங்கடலை நோக்கி எடுத்துச் செல்லப்பட்டது.

கடல் தீர்த்தம் எடுக்கப்பட்ட பின்னர், அங்கிருந்து காட்டா விநாயகர் கோயிலுக்கு கொண்டுவரப்பட்டு மடை பரவி வழிபாடு நடைபெற்றது.

இன்றைய தினம் உப்பு நீரில் விளக்கேற்றும் அதிசய நிகழ்வு நடந்தேறும். இதனைத் தொடர்ந்து காட்டா விநாயகர் ஆலயத்தில் தொடர்ச்சியாக மடை பரவி பூசைகள் நடைபெறும். தொடர்ந்து எதிர்வரும் 4ஆம் திகதி காட்டா விநாயகர் ஆலய பொங்கல் நிகழ்வும் இதனை தொடர்ந்து, ஐந்தாம் திகதி பிரசித்தி பெற்ற வற்றாப்பளை கண்ணகை அம்மன் ஆலய பொங்கல் திருவிழாவு நடைபெறும். (ஐ)

# அடுத்து ஜனாதிபதி தேர்தலே; ஐக்கிய தேசிய கட்சி அறிவிப்பு

கொழும்பு, மே 30

நாட்டில் அடுத்து நடைபெறவுள்ள தேர்தல் ஜனாதிபதி தேர்தலாகவே அமையக் கூடும் என்று ஐக்கிய தேசிய கட்சியின் உப தலைவரும் முன்னாள் அமைச்சருமான அகில விராஜ் காரியவசம் தெரிவித்தார்.

வாரியபொலவில் நேற்றுமுன்தினம் மாலை நடைபெற்ற ஐக்கிய தேசியக் கட்சியின் தொகுதி கூட்டத்தில் பங்கேற்று உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

"நாட்டில் பொருட்களின் விலைகள் குறையவுள்ளன. மின் கட்டணம் குறைக்கப்படவுள்ளது. வட்டி வீதமும் குறைவடையவுள்ளது. இவ்வாறு மக்களுக்கு பல நன்மைகள் கிட்டவுள்ளன. தனிஒருவராக வந்து நிறைவேற்று அதிகார ஜனாதிபதியாகி யுள்ளார் ரணில். நாட்டை சிறப்பாக வழி நடத்துகின்றார்." எனவும் அகில விராஜ் குறிப்பிட்டார்.

# அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'






**மேடம்**
பணப்புழக்கம் அதிகரிக்கும். வாகனவசதி பெருகும். வியாபாரத்தில் பழைய வேலையாட்களை மாற்றுவீர்கள். உத்தியோகத்தில் தலைமைக்கு நெருக்கமாவீர்கள். திடீர் யோகம் கிட்டும் நாள்.

**இடபம்**
வருங்காலத் திட்டத்தில் ஒன்று நிறைவேறும். பவேற்றுமதத்தவர் உதவுவார்கள். வியாபாரத்தில் சில தந்திரங்களை கற்றுக் கொள்வீர்கள். பழைய சிக்கல்கள் தீரும். கனவு நனவாகும் நாள்.

**மிதுனம்**
எதிர்ப்புகள் அடங்கும். பிள்ளைகளால் ஆறுதல் கிடைக்கும். வியாபாரத்தில் அதிரடியான செயல்களால் போட்டிகளை சமாளிப்பீர்கள். புதிய சலுகைகள் கிடைக்கும். தேவைகள் பூர்த்தியாகும் நாள்.

**கடகம்**
குடும்பத்தினருடன் சுபநிகழ்ச்சிகளில் கலந்துக் கொள்வீர்கள். வேற்றுமதத்தவர்கள் அறிமுகமாவார்கள். வியாபாரத்தில் சில மாற்றங்கள் செய்வீர்கள். சில நுணுக்கங்களை கற்றுக் கொள்வீர்கள்.

**சிம்மம்**
இங்கிதமான பேச்சால் எல்லோரையும் கவருவீர்கள். வியாபாரத்தில் இலாபத்தை பெருக்குவீர்கள். உத்தியோகத்தில் பணிகளை விரைந்து முடிப்பீர்கள். புது அத்தியாயம் தொடங்கும் நாள்.

**கன்னி**
ராசிக்குள் சந்திரன் இருப்பதால் சந்தேகப்படுவதை முதலில் நிறுத்துங்கள். வியாபாரத்தில் சரக்குகளை போராடி விற்பீர்கள். கவனம் செலுத்துவது நல்லது. இடம் பொருள் ஏவல் அறிந்து செயல்பட வேண்டும்.

**துலாம்**
எடுத்த வேலையை முடிக்க முடியாமல் அவதிக்குள்ளாவீர்கள். வேலையாட்களால் பிரச்னைகள் வரக்கூடும். சக ஊழியர்களிடம் விட் டுக் கொடுத்து போவது நல்லது. பொறுமை தேவைப்படும் நாள்.

**விருட்சிகம்**
எதிலும் வெற்றி பெறுவீர்கள். வெளிவட்டாரத்தில் செல்வாக்கு உயரும். வியாபாரத்தில் நவீனயுக்திகளை கையாளுவீர்கள். புது பொறுப்புகளை ஏற்பீர்கள். அனுபவ அறிவால்சாதிக்கும் நாள்.

**தனுசு**
உங்களின் நீண்ட நாள் ஆசையில் ஒன்று நிறைவேறும். வியாபாரத்தில் புது இடத்திற்கு கடையை மாற்றுவீர்கள். சக ஊழியர்களின் ஆதரவால் நினைத்தை முடிப்பீர்கள். மதிப்புக் கூடும் நாள்.

**மகரம்**
கோபத்தை கட்டுப்படுத்தி உயர்வதற்கான வழியை யோசிப்பீர்கள். வியாபாரத்தில் வேலையாட்களின் தொந்தரவு குறையும். அலுவலகத்தில் மரியாதை கூடும். திடீர் திருப்பம் நிறைந்த நாள்.

**கும்பம்**
சந்திராஷ்டமம் இருப்பதால் ஓய்வெடுக்க முடியாதபடி வேலைச்சுமை வீண் அலைச்சலும் இருக்கும். வியாபாரத்தில் வேலையாட்களின் ஒத்துழைப்பு குறையும். பிரச்னை வந்து நீங்கும்.

**மீனம்**
உங்களின் பலம் பலவீனத்தை உணர்வீர்கள். மனைவி வழியில் நல்ல செய்தி உண்டு. புது தொழில் தொடங்குவீர்கள். உத்தியோகத்தில் அதிகாரிகள் வலிய வந்து உதவுவார்கள்.

# ஸ்டாலினை பதவி விலகக்கோரி தமிழகம் முழுவதும் போராட்டம்

## அ. தி. மு. க. கட்சி நேற்று நடத்தியது

சென்னை, மே 30

போலி மதுபானங்களால் இறப்பு, சட்டம் ஒழுங்கு சீர்கேடு, போதைப் பொருட்கள் புழக்கம், ஊழல் முறைகேடுகளை கட்டுப்படுத்த தவறிய தி. மு. க. அரசை கண்டித்தும், முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் பதவி விலக வலியுறுத்தியும் மாவட்ட தலை நகரங்கள் தோறும் கண்டன ஆர்ப்பாட்டத்தை அ. தி. மு. க. நேற்று நடத்தியது.

தமிழகத்தில் நிலவும் சட்டம் ஒழுங்கு பிரச்னைகள் மற்றும் கள்ளச் சாராயம் குடித்து 22 பேர் இறந்தமைக்கு கண்டனம் தெரிவித்தே இந்த ஆர்ப்பாட்டம் நேற்று நடத்தப்பட்டது.



சென்னை தாம்பரம் சண்முகம் சாலையில் முன்னாள் எம். பி. ராஜேந்திரன் தலைமையிலும் விழுப்புரம் பழைய பேருந்து நிலையம் அருகே, அ. தி. மு. க. எம். பி. சிவி சண்முகம் தலைமையிலும் புதுக்கோட்டை மாவட்ட ஆட்சியர் அலுவலகம் அருகே முன்னாள் அமைச்சர் விஜயபாஸ்கர் தலைமையிலும்

கோவையில் மாவட்ட செயலாளர் பி.ஆர்.ஜி அருண்குமார் தலைமையிலும் போராட்டங்கள் நடைபெற்றன.

(ஐ)

# என்னை தமிழ்நாடு முதலமைச்சர் ஆக்கினால் 150 வயது வரை வாழும் இரகசியம் சொல்வேன்

## சரத்குமார் சொல்கிறார்

மதுரை, மே 30

என்னை முதல்வர் ஆக்கினால் 150 ஆண்டுகள் வரை உயிர் வாழ்வதற்கான வித்தையை உங்களுக்கு சொல்வேன் என சமத்துவ மக்கள் கட்சி தலைவர் சரத்குமார் தெரிவித்துள்ளார்.

அகில இந்திய சமத்துவ மக்கள் கட்சியின் 7ஆவது பொதுக்குழு கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மான விளக்க பொதுக்கூட்டம் மதுரையில் நடந்தது.

கட்சியின் நிறுவுநர் தலைவர் சரத்குமார் பேசுகையில்,

“சமத்துவ மக்கள் கட்சி தமிழகத்தில் ஆட்சியை பிடிக்குமா என 2026இல் தெரிய வரும், போதை இல்லாத தமிழகத்தை உருவாக்க வேண்டிய கால கட்டத்தில் இருக்கிறோம். நான் வானத்தில் இருந்து குதித்து வரவில்லை. சைக்கிளில் சென்று தெருத் தெருவாக பத்திரிகை போட்டேன். போதைப்பொருளால் இளைஞர்கள் முடக்கி வைக்கப்பட்டுள்ளனர். இந்தியாவின் இளைஞர்களின் அறிவை முடக்கி வைப்பதில் வெளிநாட்டு சதி உள்ளது.

போதை பொருள்கள் பல்வேறு ரூபங்களில் இந்தியாவில் ஊடுருவி வருகின்றது. அறிவு, ஆற்றல் இருந்தும் தமிழக இளைஞர்கள் மதுவுக்கு அடிமைப்பட்டு கிடக்குகிறார்கள். பூரண மதுவிலக்குக்காக சமத்துவ மக்கள் கட்சி இறுதி வரை போராடும். சமத்துவ மக்கள் கட்சி ஆட்சிக்கு வந்தவுடன் முதல் பணி பூரண மதுவிலக்கு அமுல்படுத்தப்படும்.

தமிழகத்தில் பணம் இல்லா அரசியல் நடைபெறவில்லை. தமிழகத்தில் எதிர்வரும் தேர்தல்கள் இராணுவ பாதுகாப்பில் நடைபெற வேண்டும்.

தற்போது எனக்கு 69 வயதாகிறது. ஆனால், 25 வயது இளைஞனைப் போல இருக்கிறேன். 150 ஆண்டுகள் வரை நான் உயிருடன் இருப்பேன். அதற்கான வித்தையை கற்று வைத்துள்ளேன். 2026ஆம் ஆண்டு என்னை முதலமைச்சர் ஆக்கினால், அந்த வித்தை என்னவென்று உங்களுக்கு சொல்கிறேன் - என்றார்.

(ஐ)

# அரசியல் கட்சி ஆரம்பிப்பது குறித்து நடிகர் விஜய் விரைவில் அறிவிப்பார்!

## விஜய் மக்கள் இயக்க பொறுப்பாளர்

சென்னை, மே 30

அரசியல் கட்சியை ஆரம்பிப்பது குறித்து விஜய் மிக விரைவில் அறிவிப்பு வெளியிடுவார் என விஜய் மக்கள் இயக்க தென் மண்டல பொறுப்பாளர் பில்லா ஜெகன் தெரிவித்துள்ளார்.

உலக பட்டினி தினமான நேற்று தமிழகத்தில் உள்ள அனைத்து பகுதிகளிலும் விஜய்

ரசிகர்கள் ஏழை மக்களின் பசியை போக்க வேண்டும் என நடிகர் விஜய் அறிவித்தார்.

இதையடுத்து நேற்று தமிழகம் முழுவதும் விஜய் ரசிகர்கள் பொதுமக்களுக்கு அன்னதானம் வழங்கி வருகின்றனர். சென்னையில், நடைபெற்ற நிகழ்வில் பங்கேற்ற விஜய் மக்கள் இயக்க தென் மண்டல பொறுப்பாளர் பில்லா ஜெகன் கருத்து வெளியிடுகையில்,

தமிழகத்தில் உணவில்லாமல் யாருமே இருக்கக்கூடாது என்பதற்காகவே ஒருவேளை உணவளிக்கும் திட்டத்தை தளபதி விஜய் தொடங்கியிருக்கிறார். விஜய் மக்கள் இயக்கம் அரசியலை நோக்கி பயணித்துக் கொண்டிருக்கிறது. கட்சி தொடக்குவது குறித்து விஜய் மிக விரைவில் அறிவிப்பார் என்றும் தெரிவித்தார்.

மாவட்ட ரீதியாக கிளைக் கழகங்கள் அமைக்கும் பணி நடக்கிறது. இது அரசியல் கட்சியாக மாறியதும் பொறுப்பாளர்கள் நியமிக்கப்படுவர் - என்றார்.

(ஐ)

# அ. தி. மு. க.வின் பலவீனத்தை வைத்து தி. மு. க. அரசியல் செய்வதில்லை

## முதல்வர் ஸ்டாலின் தெரிவிப்பு

சிங்கப்பூர், மே 30

அ. தி. மு. கவின் பலவீனத்தை பயன்படுத்தி தி. மு. க. அரசியல் செய்வதில்லை என்று அந்தக் கட்சியின் தலைவரும் தமிழ்நாட்டின் முதலமைச்சருமான மு. க. ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

சிங்கப்பூர் நாளிதழ் ஒன்றுக்கு பேட்டியளித்த அவர்,

கருணாநிதி காலத்தில் நிகழ்ந்ததைப்போல, பா. ஜ. கவுடன் தி. மு. .க கூட்டணி அமைக்க வாய்ப்பில்லை எனத் தெரிவித்தார். வாஜ்பாய் தலைமையிலான அன்றைய பா. ஜ. க.வுக்கும் இன்றைய பா. ஜ. கவுக்கும் நிறைய வேறுபாடு உள்ளது.

அதிமுக நான்கு அணிகளாகப் பிரிந்திருக்கும் நிலையில், அந்தக் கட்சியின் பலவீனத்தை பயன்படுத்தி தி. மு. க. அரசியல் செய்வதில்லை. கொள்கைகளையும் தொண்டர் பலத்தையும் நம்பியே தி. மு. க. இருக்கிறது எனத் தெரிவித்தார்.

(ஐ)



# புத்தர் சிலை வைக்கப்பட்டிருந்த கண்ணாடிப் பெட்டி உடைப்பு!

கொழும்பு, மே 30

இமதுவ அகுலுகஹா பிரதேசத்தில் காணப்படும் புத்தர் சிலை வைக்கப்பட்டுள்ள கண்ணாடிப் பெட்டி ஒன்று உடைக்கப்பட்டுள்ளது.

ஆயினும் புத்தர் சிலைக்கு எவ்வித சேதமும் ஏற்படவில்லை என இமதுவ பொலிஸார் தெரிவித்தனர்.

குறித்த சம்பவம் தொடர்பிலான மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருவதாகவும் இமதுவ பொலிஸார் மேலும் கூறினர். (அ)

# பொருட்களின் விலை தொடர்பில் ஆராய்வதற்கு அரசு நடவடிக்கை

## ரஞ்சித் சியம்பலாபிட்டிய தகவல்



கொழும்பு, மே 30

**இலங்கை ரூபாவின் பெறுமதி வலுவடைந்தமையை தொடர்ந்து அதற்கு இணையாக இறக்குமதி செய்யப்படும் பொருட்களின் விலையில் உரிய வகையில் திருத்தங்கள் மேற்கொள்ளப்படுகின்றதா என்பதனை ஆராய்ந்து பாரக்கவுள்ளதாக நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய தெரிவித்தார்.**

அவர் மேலும் தெரிவிக்கையில்-

அவிசாவளை தெஹியோவிட்ட பகுதியில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் பங்கேற்று உரையாற்றும் போதே நிதி இராஜாங்க அமைச்சர் இதனை கூறினார்.

டொலர் பற்றாக்குறையை நிவர்த்தி செய்வதற்காகவும் அந்நிய செலாவணியை (சர்வதேச நாணய கையிருப்பு) சீராக பேணுவதற்காகவும் இறக்குமதி செய்யப்படும் பொருட்களுக்கு கட்டுப்பாடுகளை விதிக்க அரசாங்கம் பல்வேறு சந்தர்ப்பங்களில் நடவடிக்கைகளை மேற்கொண்டிருந்தன.

விவசாயம், கடற்றொழில் மற்றும் கைத்தொழில் உள்ளிட்ட பல்வேறு துறையினரால் முன்வைக்கப்பட்ட கோரிக்கைகளுக்கு அமைய தற்போது சில பொருட்களை இறக்குமதி செய்வதற்கு விதிக்கப்பட்டிருந்த கட்டுப்பாடுகள் தளர்த்தப்பட்டுள்ளன.

பொருளாதாரம் முன்னேற்றப்பாதையை நோக்கி நகர்வதால் அந்நிய செலாவணி கையிருப்பிற்கு அச்சுறுத்தல் ஏற்படாத வகையில் மேலும் சில இறக்குமதி பொருட்களுக்கான கட்டுப்பாடுகளை தளர்த்துவதற்கு அவதானம் செலுத்தப்படும்-என்றார். (அ)

# இந்த மாதம் மட்டும் ஐந்து தடவை வெளிநாடு சென்ற அலி சப்ரி ரஹீம்

## டலஸ் அழகப்பெரும தகவல்



கொழும்பு, மே 30

தங்கத்தைக் கடத்திய குற்றச்சாட்டில் கைதான பாராளுமன்ற உறுப்பினர் அலி சப்ரி ரஹீம் ஒவ்வொரு மாதமும் இரண்டு தடவைகள் வெளிநாடு சென்றுள்ளதாகவும், இந்த மாதத்தில் மாத்திரம் ஐந்து தடவைகள் வெளிநாடு சென்றுள்ளதாகவும் பொதுஜன பெரமுனவின் பாராளுமன்ற உறுப்பினர் டலஸ் அழகப்பெரும தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

ஒவ்வொரு மாதமும் குறைந்தது இரண்டு தடவைகளேனும் இவர் பிரமுகர் நுழைவாயில் ஊடாக வெளிநாட்டுக்குச் சென்றுள்ளார். இந்த மாதத்தில் மாத்திரம் ஐந்து தடவைகள் வெளிநாடு சென்றுள்ளார்.

வாக்கெடுப்பு தினத்தன்று வந்தார். அரசுக்கு எதிராக வாக்களிக்கிறார். நான் அந்தத் தலைவருக்குக் கூறினேன், இந்தத் தலைவருக்கு கூறினேன், அவர்கள் அதற்குச் செவிசாய்க்கவில்லை. அதனால், அரசுக்கு எதிராக வாக்களித்ததாக அவர் கூறுகின்றார்.

மிகவும் அழகான கதை ஒன்றே இது. சிறந்த நடிகருக்கான விருது இவருக்கு வழங்கப்பட வேண்டும். இவர் அடுத்த நாளே டுபாய்க்குச் சென்றுள்ளார். அவருக்கு மனச்சாட்சி இருந்தால் பதவியிலிருந்து விலக வேண்டும்-என்றார். (அ)

# வர்த்தகரை கடத்திய மூவர் கைது

கொழும்பு, மே 30

வெளிநாட்டில் இருந்து நாட்டுக்கு கொண்டு வரப்பட்ட பல இலட்சம் ரூபாய் பெறுமதியான பொருட்களை கட்டுநாயக்க விமான நிலையத்திலிருந்து எடுத்து செல்லும் போது வர்த்தகர் ஒருவர் கடத்தப்பட்ட சம்பவம் தொடர்பில் மூவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

நேற்று முன் தினம் கைது செய்யப்பட்ட குறித்த சந்தேக நபர்கள் மூவரும் ஒழுங்கமைக்கப்பட்ட குற்றச் செயல்களில் ஈடுபடுபவர்கள் என விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

கொழும்பு கிராண்ட்பாஸ் பகுதியில் வசிக்கும் 52 வயதான வர்த்தகர் ஒருவரினால், கடந்த வருடம் டிசெம்பர் மாதம் 21 ஆம் திகதி கட்டுநாயக்க விமான நிலையத்தில், அவரால் இறக்குமதி செய்யப்பட்ட பொருட்கள் பெற்றுக்கொள்ளப்பட்டன.

பின்னர் அதனை அவர் பெற்றுக்கொண்டு வெளியேறி பயணித்துக் கொண்டிருக்கையில் கட்டுநாயக்க 18 ஆம் மைல்கல் பகுதியில் வைத்து கடத்தப்பட்டுள்ளார்.

இதனையடுத்து பொலிஸாரால் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளில், சந்தேகநபர்கள் மூவரும் கைது செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

அதேநேரம், குறித்த வர்த்தகரின் உதவியாளராகப் பணியாற்றிய பெண்ணொருவரே குறித்த செயலை திட்டமிட்டு முன்னெடுத்துள்ளதாக பொலிஸ் தெரிவித்துள்ளது.

# மதச்சுதந்திரம் குறித்து புதிய சட்ட மூலம் வரும்

கொழும்பு, மே 30

எதிர்வரும் காலங்களில் மத சுதந்திரம் மற்றும் கருத்துக்களை திரிபுபடுத்தல் தொடர்பில் புதிய சட்டமூலமொன்றை கொண்டு வர நடவடிக்கை எடுப்பதாக புத்த சாசன அமைச்சர் விதுர விக்ரமநாயக்க தெரிவித்தார்.

மதங்களை அவமதிக்கும் வகையில் கருத்து வெளியிடுபவர்கள் தொடர்பில் பொலிஸார், விசேட விசாரணைகளை ஆரம்பித்துள்ளதாக அமைச்சர் சுட்டிக்காட்டியுள்ளார்.

அண்மையில் பௌத்த மதத்தை அவமதிக்கும் வகையில் கருத்து வெளியிட்ட நடாஷா எதிரிசூரிய கைது செய்யப்பட்டமை புத்தசாசன அமைச்சின் நேரடி தலையீட்டிலேயே மேற்கொள்ளப்பட்டதாக வியடத்துக்கு பொறுப்பான அமைச்சர் விதுர விக்ரமநாயக்க தெரிவித்தார். (அ)

# கம்பி இணைப்புக்கள் ஊடாக இந்தியாவிடமிருந்து மின்சாரம்

## முதல் கட்டமாக 500 மெகாவோட் மின்

கொழும்பு, மே 30

இலங்கையின் மின்சார தேவையை பூர்த்தி செய்வதற்காக இந்தியாவில் இருந்து கம்பி இணைப்பு மூலம் ஆயிரம் மெகாவோட் மின்சாரத்தை பெற்றுக்கொள்ளும் திட்டப்பணிகள் இந்த ஆண்டு ஆரம்பிக்கப்பட உள்ளதுடன் அது எதிர்வரும் 2027 ஆம் ஆண்டு நிறைவடையும் என இலங்கை மின்சார சபையின் சிரேஷ்ட பொறியியலாளர்கள் சங்கத்தின் ஊடகப் பேச்சாளர் நந்திக பத்திரகே தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

இந்த மின்சார திட்டம் சம்பந்தமான சுற்றுச்சூழல் அறிக்கை தற்போது தயாரிக்கப்பட்டு வருகிறது. இந்த திட்டத்திற்காக 400 மில்லியன் டொலர்கள் செலவாகும்.

தலைமன்னாரில் இருந்து தமிழ்நாடு வரை கடலில் அமைக்கப்படும் தூண்கள் ஊடாக கம்பி இணைப்பு மூலம் மின்சாரம் பெற்றுக்கொள்ளப்பட உள்ளதுடன் முதல் கட்டமாக 500 மெகாவோட் மின்சாரமும் இரண்டாவது கட்டமாக 500 மெகாவோட் மின்சாரமும் பெற்றுக்கொள்ள திட்டமிடப்பட்டுள்ளது.

இந்த மின் இணைப்பு திட்டத்திற்கான செலவை இந்தியா ஏற்பது அல்லது மூன்றாவது தரப்பின் உதவியை பெறுவது தொடர்பாக பேச்சுவார்த்தைகள் நடைபெற்று வருகின்றன.

ஐரோப்பா மற்றும் மத்திய கிழக்கு நாடுகள் இவ்வாறு மின்சாரத்தை பரிமாறிக்கொள்கின்றன.

இந்தியாவுக்கும் இலங்கைக்கும் இடையில் மின்சார விநியோக இணைப்பு தொடர்பில் நீண்டகாலமாக கவனம் செலுத்தப்பட்டு வந்துள்ளதாகவும் பத்திரகே கூறியுள்ளார்.

இரண்டு இணைப்புகளை கொண்டதாக இந்த மின்சார விநியோக திட்டம் நிர்மாணிக்கப்பட உள்ளது.

இலங்கையில் மேலதிகமான மின்சாரத்தை உற்பத்தி செய்யும் போது இந்தியாவுக்கு வழங்கவும் இலங்கையில் மின்சார தேவை அதிகரிக்கும் போது இந்தியாவிடம் இருந்து விலைக்கு வாங்கவும் இதன் மூலம் திட்டமிடப்பட்டுள்ளது - என்றார். (அ)

# சட்டவிரோத உற்பத்தியை நாடிவரும் மதுப் பிரியர்கள்

கொழும்பு, மே 30

வரி உயர்வைத் தொடர்ந்து, பல இலங்கையர்கள் உள்ளூர் மதுபான கொள்வனவில் இருந்து, அண்மைய மாதங்களாக சட்டவிரோத மது உற்பத்தியை நாடுவதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

இதன் காரணமாக சட்டவிரோத மது உற்பத்தி அதிவேகமாக அதிகரித்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தநிலையில் மதுபான விற்பனை பாரியளவு குறைந்துள்ளதாக இலங்கை மதுபான உரிமம் வைத்திருப்போர் சங்கம் தெரிவித்துள்ளது.

ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றிய சங்கத்தின் தலைவர் டலஸ் பெர்னாண்டோ, காட்டு யானைகளை அடக்குவதற்கு பயன்படுத்தப்படும் ட்ரான் குலைசர்கள் உட்பட பல ஆபத்தான இரசாயனங்கள், சட்டவிரோத மது உற்பத்தி நடவடிக்கைகளில் பயன்படுத்தப்படும் மூலப் பொருட்களில் உள்ளதாக எச்சரித்துள்ளார்.

இதேவேளை வரிகள் குறைக்கப்பட்டால், அரசாங்கம் தமது வருமானத்தை, தற்போதைய 170 பில்லியன் ரூபாவிலிருந்து 300 பில்லியன் ரூபாவாக அதிகரிக்க முடியும் என்றும் இலங்கை மதுபான உரிமம் வைத்திருப்போர் சங்கத்தின் தலைவர் குறிப்பிட்டார். (அ)

# அரசை கவிழ்த்தால் மட்டுமே நாட்டினால் மீண்டெழ முடியும்

## விஜித் விஜயமுனி சொய்சா

**கொழும்பு, மே 30**

**அரசாங்கத்தை கவிழ்ப்பதன் மூலம் மாத்திரமே நாடு தற்போது இருக்கும் நிலைமையில் இருந்து மீள முடியும் என முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் விஜித் விஜயமுனி சொய்சா தெரிவித்துள்ளார்.**

கொழும்பில் நேற்று நடைபெற்ற ஐக்கிய மக்கள் சக்தியின் ஊடகவியலாளர் சந்திப்பில் கருத்து வெளியிடும் போதே அவர் இதனை கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்- நாட்டில் எவ்வித வேலைத் திட்டங்களும் இல்லை. இந்த நிலைமையில் இருந்து நாட்டை மீட்க வேண்டுமாயின் தற்போதைய அரசாங்கத்தை கவிழ்ப்பதே ஒரே மாற்று வழி.

கட்டுநாயக்க விமான நிலையம் கட்டான தொகுதியில் அமைந்துள்ளது. இதன் மூலம் நேரடியாகவும் மறைமுகமாகவும் இலாபம் பெறும் நிறுவனங்கள் இருக்கின்றன. அவற்றையும் சில நிறுவனங்களுக்கு வழங்க முயற்சித்து வருகின்றனர்.

வாடகை வாகனச் சேவையில் ஈடுபடும் சாரதிகளின் தொழிலை இல்லாமல் செய்து, வாடகை வாகன அனுமதிப்பத்திரங்கள் விற்கப்படுகின்றன. இதன் மூலம் அரசியல்வாதிகளுக்கே தரகு பணம் கிடைக்கும்.

வாகன சாரதிகள் குறித்து முறைப்பாடுகள் கிடைத்துள்ளதாக அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா கூறுகிறார்.

இதனுடன் தொடர்புடைய அரசியல் மாபியாவையே ஒழிக்கவேண்டும். அதற்கு பதிலாக வெளிநாட்டு நிறுவனத்திற்கு வாடகை வாகன சேவையை நடத்தும் உரிமையை நிமல் சிறிபால டி சில்வா வழங்கியுள்ளதாக தகவல் கிடைத்துள்ளது.

அரசாங்கம் பலர் தொழில் வாய்ப்புகளை இழக்கும் வேலையையே செய்கிறது.

சர்வதேச தொழில் வாய்ப்புகளை உருவாக்கும் சந்தர்ப்பத்தை இல்லாமல் செய்து சர்வதேச நாணய நிதியத்தின் பின்னால் செல்கின்றனர்.

தரகு பணம் பெறும் அரசியல் செயற்பாடுகள் காரணமாகவே இந்த நிலைமை ஏற்பட்டது.

கட்டுநாயக்க விமான நிலையத்திற்கு பல பில்லியன் அமெரிக்க டொலர் விலை நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.

மத்தள விமான நிலையத்திற்கு 300 மில்லியன் டொலர் விலை நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.

இவற்றை விற்பனை செய்வதன் மூலம் அரசாங்கம் எதனை எதிர்பார்க்கின்றது?.

விமான நிலையத்தை விற்பனை செய்யும் இடத்தை நோக்கி செல்கின்றனர். தயது செய்து அமைச்சர் இதனை நிறுத்த வேண்டும்.

வாடகை வாகன ஓட்டுநர்களின் தொழிலை பாதுகாக்க வேண்டும் -என்றார்.

(அ)

# எக்ஸ்பிரஸ் பேர்ள் கப்பலில் மீண்டும் எண்ணெய் கசிவு



கொழும்பு, மே 30

இலங்கைக் கடற்பரப்புக்குள் தீவிபத்துக்குள்ளாகிய எக்ஸ்பிரஸ் பேர்ள் கப்பலில் இருந்து மீண்டும் எண்ணெய் கசிவு ஏற்பட்டுள்ளதாக மீனவர்கள் குற்றஞ்சுமத்தியுள்ளனர்.

வத்தளை - எலகந்த கடற்பகுதியில் இந்த எண்ணெய் கசிவு ஏற்பட்டுள்ளதாகவும் மீனவர்கள் தெரிவித்தனர்.

சுற்றாடல், இயற்கை வளங்கள் மற்றும் நிலைபேறான அபிவிருத்தி பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவின் தலைவர் அஜித் மான்னப்பெரும இது தொடர்பில் அப்பகுதிக்கு சென்று ஆராய்ந்துள்ளார்.

சிங்கப்பூர் நிறுவனத்துக்கு சொந்தமான எக்ஸ்பிரஸ் பேர்ள் கப்பல் 2021ஆம் ஆண்டு மே 20ஆம் திகதி, கொழும்பு துறைமுகப் பகுதிக்கு அருகில் திடீரென தீப்பற்றியிருந்தமைக் குறிப்பிடத்தக்கது.

(அ)

# நடாஷாவின் நிகழ்வுக்கு சென்றவர்களுக்கும் சிக்கல்

## விசாரணைகளை ஆரம்பித்தது சி.ஐ.டி.

கொழும்பு, மே 30

கொழும்பில் அண்மையில் நடைபெற்ற நகைச்சுவை நிகழ்வொன்றில் பௌத்த மதத்தை அவமதித்ததாகக் கூறி நடாஷா எதிரிசூரிய கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

இந்நிலையில், அவரது நிகழ்ச்சிக்கு சென்றவர்களை இனங்கண்டு அவர்களிடமிருந்து வாக்குமூலங்களைப் பெறுவதற்கான விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

குற்றப் புலனாய்வு திணைக்களத்தின் இணையவழி குற்றங்களை (சைபர் குற்றங்களை) விசாரணை செய்யும் பிரிவே இந்த விசாரணைகளை முன்னெடுத்துள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் நிஹால் தல்துவ தெரிவித்துள்ளார். (அ)

# கண்டி இந்தியத் தூதரகம் திறக்கப்பட்டு 100 ஆண்டுகள்

கொழும்பு, மே 30

கண்டியில் உள்ள இந்திய துணைத் தூதரகம் திறக்கப்பட்டு 100 ஆண்டுகள் பூர்த்தியாகியுள்ளதை முன்னிட்டு நினைவுச்சின்னம் வெளியிடப்பட்டுள்ளது.

நினைவுச்சின்னம் வெளியிடும் நிகழ்வு கண்டி ரீச் ஹொட்டலில் நடைபெற்றது.

இலங்கை பெருந்தோட்டங்களில் பணிப்புரிய இந்தியாவில் இருந்து வந்த தொழிலாளர்களுக்காக கண்டியில் அன்றைய பிரித்தானிய இந்திய அரசாங்கத்தின் இந்த அலுவலகம் 1923 ஆம் ஆண்டு திறக்கப்பட்டது.

1947 ஆம் ஆண்டு இந்தியா பிரித்தானியாவிடம் இருந்து சுதந்திரம் பெற்ற பின்னர், இந்த அலுவலகம் விசா வழங்கும் அலுவலகமாக இயங்கி வந்ததுடன் 1965 ஆம் ஆண்டு இந்திய துணைத் தூதரகமாக மாற்றப்பட்டது.



100ஆவது பொன் விழா ஆண்டை முன்னிட்டு வெளியிடப்பட்ட நினைவுச்சின்னத்தை இந்திய தூதுவர் கோபால் பக்லே, இணையத்தளம் வழியாக வெளியிட்டார்.

இந்த நிகழ்வில் கண்டிக்கான இந்திய துணைத் தூதுவர் மருத்துவர் எஸ்.அதிரா , கண்டி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் வேலுகுமார், மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் உத்பல ஜயரத்ன, மத்திய மாகாண சபையின் முன்னாள் உறுப்பினர் மதியுகராஜா, துணைத் தூதரக இரண்டாவது செயலாளர் ஆர். சோமராஜ் உள்ளிட்டோர் கலந்துகொண்டனர். (அ)

# சொத்து சேர்த்தாரா அலி சப்ரி ரஹீம்? விசாரிக்க வேண்டுமென முறைப்பாடு

கொழும்பு, மே 30

தங்கம் கடத்திய பாராளுமன்ற உறுப்பினர் அலி சப்ரி ரஹீமுக்கு எதிராக இலஞ்ச, ஊழல் ஆணைக்குழுவில் ஐக்கிய மக்கள் சக்தி முறைப்பாடு செய்துள்ளது.

அலி சப்ரி ரஹீமுக்கு எதிராக விசாரணைகளை மேற்கொள்ள வேண்டுமென தெரிவித்து, ஐக்கிய மக்கள் சக்தியின் இளம் சட்டத்தரணிகள் சங்கமே இந்த முறைப்பாட்டை செய்துள்ளது.

1975ஆம் ஆண்டின் 01 இலக்க சொத்துகள் மற்றும் பொறுப்புகள் சட்டத்தின் கீழ், பாராளுமன்ற உறுப்பினராகப் பதவியேற்ற காலத்திலிருந்து அலி சப்ரி ரஹீம் சொத்துகளை சேர்த்துள்ளாரா என்பதுத் தொடர்பில் விசாரணைகளை மேற்கொள்ள வேண்டுமென அந்த முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இலஞ்ச, ஊழல் ஆணைக்குழுவின் சட்டங்களை மீறி புத்தள மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் செயற்பட்டிருப்பது உறுதி செய்யப்படுமாக இருந்தால் அவருக்கு எதிராகக் கடுமையாக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமென, நாட்டு மக்கள் சார்பாக கோரிக்கை விடுப்பதாகவும் ஐக்கிய மக்கள் சக்தியின் இளம் சட்டத்தரணிகள் சங்கம் தெரிவித்துள்ளது.

மேலும், தங்கக் கடத்தலுக்கும் தனக்கும் எந்தவிதமான தொடர்புகளும் இல்லை. என்னோடு வந்தவரே தங்கத்தைக் கடத்தியதாக அலி சப்ரி ரஹீம் கூறுகிறார். அப்படியென்றால், அந்த நபரின் பெயரை அவர் கூற வேண்டுமெனவும் சட்டத்தரணிகள் சங்கம் வலியுறுத்தியுள்ளது. (அ)

# 50 இலட்சம் ரூபா பெறுமதியான போதைப்பொருளுடன் பெண் கைது

கொழும்பு, மே. 30

கொழும்பு கிராண்ட்பாஸ் ஹேனமுல்ல பிரதேசத்தில் 50 இலட்சம் ரூபா பெறுமதியான போதைப்பொருளுடன் பெண் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

விசேட அதிரடிப்படையின் விசேட அதிரடிப் பிரிவுக்கு கிடைத்த இரகசிய தகவலுக்கமைய விசேட அதிரடிப்படையின் கட்டளை அதிகாரி பிரதிப் பொலிஸ் மா அதிபர் வருண ஜயசுந்தரவின் உத்தரவிற்கமைய கொழும்பு, கிராண்ட்பாஸ் பகுதியில் சோதனை மேற்கொண்டபோது குறித்த பெண் கைது செய்யப்பட்டார்.



குறித்த பெண்ணிடம் இருந்து 50 இலட்சம் ரூபா பெறுமதியான 610 மில்லி கிராம் போதைப்பொருள், 50 கிராம் ஐஸ் போதைப் பொருள் மூன்று கிலோ 240 கிராம் கேரள கஞ்சா மற்றும் 900 போதை மாத்திரைகள் கைப்பற்றப்பட்டுள்ளது.

இந்த சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளை பொலிஸார் ஆரம்பித்துள்ளனர்.(அ)

# டொலரின் பெறுமதி குறைவது ஆபத்து!



## அநுரகுமார எம். பி.

கொழும்பு, மே 30

**இலங்கை சர்வதேச சந்தையில் முனைப்புடன் ஈடுபடாததால்தான் டொலரின் பெறுமதி குறைவதற்கான காரணம் என தேசிய மக்கள் சக்தியின் தலைவர் அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.**

கடன்களை திருப்பி செலுத்துதல், பொருட்களை இறக்குமதி செய்தல் மற்றும் வெளிநாட்டு இருப்புகளை அதிகரிப்பதற்கான மத்திய வங்கியின் முயற்சிகள் போன்ற முக்கிய மூன்று காரணிகளுக்காகத்தான் இலங்கைக்கு டொலர் தேவைப்படுகிறது என பொதுக்கூட்டம் ஒன்றில் கலந்து கொண்ட போது அவர் தெரிவித்தார்.

டொலரின் தொடர்ச்சியான வீழ்ச்சியானது இலங்கையின் பொருளாதாரம் மேலும் சுருங்குவதற்கு வழிவகுக்கும். இதன் காரணமாக பொதுமக்களின் துன்பங்கள் எதிர்காலத்தில் அதிகரிக்கும் என்றும் அவர் சுட்டிக்காட்டினார். (ஐ)

# மியன்மாருக்கு கடத்தப்பட்ட 6 இலங்கையர் நாடு திரும்பினர்!

கொழும்பு, மே 30

வேலை வாய்ப்பு என்ற போர்வையில் மியன்மாருக்கு கடத்தப்பட்ட ஆறு இலங்கையர்கள் அங்கிருந்து பாதுகாப்பாக இலங்கைக்கு திருப்பி அனுப்பப்பட்டுள்ளனர்.

மியன்மாருக்கு கடத்தப்பட்ட ஆறு இலங்கையர்கள் அங்கு சிக்குண்டிருந்த நிலையில் மியன்மார் அதிகாரிகளால் மீட்கப்பட்டு இலங்கைக்கு திருப்பி அனுப்பப்படுவதற்காக அங்குள்ள இலங்கைத் தூதரகத்திடம் ஒப்படைக்கப்பட்டனர் என வெளிவிவகார அமைச்சு தெரிவித்துள்ளது.

இலங்கை அரசாங்கத்தின் வேண்டுகோளை தொடர்ந்தே மியன்மார் அதிகாரிகள் அங்கு சிக்குண்டிருந்த இலங்கையர்களை மீட்பதற்கான நடவடிக்கைகளில் ஈடுபட்டனர்.

தென்கிழக்காசிய நாடுகளில் இயங்கும் திட்டமிட்ட ஆள்கடத்தல் கும்பலிடம் சிக்கிய இலங்கையர்களே மீட்கப்பட்டுள்ளனர்.

கடந்த வியாழக்கிழமை விமானம் மூலமாக இவர்கள் இலங்கை வந்தனர். (ஐ)

# பௌத்த மதத்தின்மீது அரசாங்கம் திட்டமிட்டு தாக்குதல் நடத்துகிறதா?

## சந்தேகம் எழுப்புகிறார் டிலான் பெரேரா

கொழும்பு, மே 30

மதங்களுக்கு இடையூறு விளைவிப்பவர்கள் சட்டத்தின் முன் நிறுத்தப்படுகின்றனர். இருப்பினும் பௌத்த மதத்தின் மீது அரசாங்கம் திட்டமிட்டு தாக்குதல் நடத்துகிறது என்று சந்தேகம் எழுந்துள்ளது. மக்களின் கவனத்தை அன்றாட பிரச்னைகளில் இருந்து திசை திருப்ப அரசாங்கம் இந்த மத விவகாரத்தை கையில் எடுத்துள்ளதா என்ற சந்தேகம் ஏற்பட்டுள்ளதாக பாராளுமன்ற உறுப்பினர் டிலான் பெரேரா தெரிவித்துள்ளார்.

அரசாங்கத்தின் சில விடயங்களை திசை திருப்புவதில் தற்போதைய அரசாங்கம் சாமர்த்தியமாக செயற்படுவதாக தெரிவித்த அவர் கடந்த இரண்டு மூன்று வாரங்களாக மக்கள் தொடர்ந்து பாஸ்டர் ஜெரோம், நடாஷா பற்றி பேசுகின்றனர் என்றும் குறிப்பிட்டுள்ளார்.

பொருட்களின் விலை குறைக்கப்படுமா என்று கேள்வி எழுப்ப வேண்டிய நிலையில் பாஸ்டர் ஜெரோமை எப்படி தண்டிப்பது ? நடாஷாவை சிறையில் அடைப்பார்களா என்பது குறித்து மக்கள் அவதானம் செலுத்துகின்றனர்.

அறகலய மூலம் ரணில் விக்கிரமசிங்க மாத்திரமே வெற்றிபெற்றார். போராட்டத்தில் செயல்பட்ட வேறு எவரும் வெற்றிபெறவில்லை. அதில், சிறப்பாக செயல்பட்ட பல் கலைக்கழகங்களுக்கு இடையிலான குழுவின் பிள்ளைகள் வெற்றிபெறவில்லை. இந்நாட்டின் அண்மைக்கால வரலாற்றில் முன்னெப்போதும் இல்லாத வகையில் கடுமையான குற்றக் கும்பல்கள் மீண்டும் தலைதூக்கியுள்ளன. கடந்த மாதத்தில் 27 துப்பாக்கி சூட்டு சம்பவங்களில் 19 பேர் கொல்லப்பட்டனர்.

'சுதந்திர ஜனதா சபை' கொழும்பில் நேற்று நடத்திய செய்தியாளர் சந்திப்பிலேயே பாராளுமன்ற உறுப்பினர் டிலான் பெரேரா மேற்கண்டவாறு தெரிவித்தார். (ஐ)

## யாழ்ப்பாணம் - சுண்டுக்குளியில்

# கலாசார பிறழ்வில் ஈடுபட்ட சந்தேகத்தில் மூவர் கைது!

யாழ்ப்பாணம், மே 30

யாழ். நகரை அண்மித்த சுண்டுக்குளியில் உள்ள தனியார் விடுதி ஒன்றில் கலாசார சீரழிவுகள் இடம்பெறுகின்றன என்று யாழ்ப்பாண பொலிஸாருக்கு நேற்று கிடைத்த முறைப்பாட்டின் அடிப்படையில் விடுதியில் சோதனை நடத்தி மூவரை கைது செய்தனர்.

அந்த விடுதியில் சந்தேகத்துக்கு இடமானவர்களின் நடமாட்டங்கள் காணப்படுகின்றன. கலாசார சீரழிவுகளுக்கு இவை துணையாகின்றன என்று முறையிடப்பட்டது.

இதன் அடிப்படையில், விடுதியை யாழ்ப்பாண பொலிஸ் நிலைய குற்றத்தடுப்பு பிரிவின் பொறுப்பதிகாரி தலைமையிலான பொலிஸ் குழுவினர் முற்றுகையிட்டு சோதனையிட்டபோது, உரிய பதிவுகள் இன்றி விடுதியில் சந்தேகத்துக்கு இடமான முறையில் தனி அறைகளில் தங்கி இருந்த தெகிவளையை சேர்ந்த இரு பெண்களை கைது செய்துள்ளனர். அத்துடன் விடுதியின் முகாமையாளரையும் கைது செய்துள்ளனர்.

கைது செய்யப்பட்ட இரு பெண்களையும் முகாமையாளரையும் பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைத்து விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

இந்த விடயம் தொடர்பாக அப்பகுதி மக்கள் பொலிஸ், இராணுவ தரப்பினருக்கு முறைப்பாடு செய்யப்பட்ட போதும் நடவடிக்கை எடுக்கப்படவில்லை. இந்நிலையில், நேரடியாக குற்றத்தடுப்பு பொலிஸ் பொறுப்பதிகாரிக்கு முறைப்பாடு செய்யப்பட்டதை அடுத்தே நடவடிக்கை எடுக்கப்பட்டதாகக் கூறப்படுகின்றது. (ஐ)



# சண்டிலிப்பாய் பிரதேச செயலகத்தில் நடந்த பாரம்பரிய உணவுத் திருவிழா

யாழ்ப்பாணம், மே 30

சண்டிலிப்பாய் பிரதேச செயலகத்தின் பாரம்பரிய உணவுத் திருவிழா நேற்று பிரதேச செயலகத்தில் வெகு சிறப்பாக நடைபெற்றது.

இதன்போது சிறு முயற்சியாளர்களின் பாரம்பரிய உணவுகளான தோசை, அப்பம், ஒடியல் கூழ், குரக்கன் பிட்டு, பலகார வகைகள், பழங்கள், இளநீர், தானிய உணவுகள், நுங்கு, பழச்சாறுகள், எண்ணெய் வகைகள் உள்ளிட்ட பல வகையான உணவுகள் காட்சிப்படுத்தப்பட்டதுடன் விற்பனையும் இடம்பெற்றது.

சிறு முயற்சியாளர்களின் வாழ்வாதாரத்தை ஊக்குவித்தல், அவர்களது உற்பத்திகளை விளம்பரப்படுத்தல், நவீன யுகத்தில் இளைஞர் யுவதிகளிடையே ஏற்பட்டுள்ள விரைவு உணவு பழக்க வழக்கங்களை மாற்றி பாரம்பரிய உணவுப் பழக்கவழக்கத்தை ஏற்படுத்தி அவர்களை நோய் நொடிகளில் இருந்து பாதுகாத்தல் உள்ளிட்ட பல நல்லெண்ண நோக்கில் இந்த உணவுத் திருவிழா நடைபெற்றது.

காலை 9.00 மணியளவில், பிரதேச செயலர் திருமதி யசோதா உதயகுமார் அவர்களது தலைமையில் ஆரம்பமான இந்நிகழ்வில், உதவிப் பிரதேச செயலர் செல்வகுமாரி நேசகுமார், பிரதேச செயலக உத்தியோகத்தர்கள், சிறு தொழில் முயற்சியாளர்கள் மற்றும் பொதுமக்கள் என பலரும் இதில் கலந்துகொண்டனர். (அ)

# தமிழ் திரைப்படங்களே சிறுவரிடையே வன்முறை உணர்வை தூண்டுகின்றன

## டயானா கமகே எம். பி. சொல்கிறார்

கொழும்பு, மே 30

தமிழ்த் திரைப்படங்களே சிறுவர்கள் மத்தியில் வன்முறைகளை தூண்டுகின்றன என்று பாராளுமன்றத்தில் வெகுஜன ஊடக அமைச்சின் ஆலோசனை செயல்குழு கூட்டத்தின் போது இராஜாங்க அமைச்சர் டயானா கமகே தெரிவித்த கருத்துக்கு பாராளுமன்ற உறுப்பினர் மனோ கணேசன் கடுமையான எதிர்ப்பை வெளியிட்டார்.

அத்துடன், டயானா கமகே தனது கூற்றை மீளப்பெற வேண்டும் என வலியுறுத்தினார்.

போக்குவரத்து நெடுஞ்சாலைகள் மற்றும் வெகுசன ஊடக அமைச்சர் பந்துல குணவத்தன தலைமையில் பாராளுமன்ற கட்டடத் தொகுதியில் கடந்த வெள்ளிக்கிழமை இடம்பெற்ற கூட்டத்திலேயே இந்த சம்பவம் நடந்தது.

பாராளுமன்ற உறுப்பினர்கள், அனைத்து ஊடக நிறுவனங்களின் பிரதானிகள், செய்தி பிரிவின் பிரதானிகள், அமைச்சின் அதிகாரிகள், பத்திரிகை முறைப்பாட்டு ஆணைக் குழுவின் உறுப்பினர்கள் இந்த கூட்டத்துக்கு அழைக்கப்பட்டிருந்தனர்.

ஊடகங்கள் பின்பற்றும் நடைமுறைகள் மற்றும் அதனால் ஏற்படும் சமூக பாதிப்புகள் குறித்து இதன் போது விரிவாக ஆராயப்பட்டது.

இங்கு கருத்து வெளியிட்ட சுற்றுலா இராஜாங்க அமைச்சர் டயானா கமகே, தொலைக்காட்சிகளில் ஒளிபரப்பப்படும் தமிழ் திரைப்படங்கள் வன்முறைகளை தூண்டுவதாக அமைவதால் அது குறித்து நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்றார்.

சிங்கள தொலைக்காட்சிகளில் தமிழ் படங்களை மொழி பெயர்த்து ஒளிபரப்புவதாகவும், தமிழ் படங்களில் வன்முறை, களியாட்டம் அதிகம் என்றும் அவர் கூறினார். குறிப்பாக கொலை செய்தல், வெட்டுக் குத்து காயங்கள், வெளிப்படையாக வழங்கப்படும் தண்டனைகள் ஆகிய சிறுவர்கள் மத்தியில் மாறுபட்ட சிந்தனையை தூண்டுவதாக அவர் கூறினார்.

இதன்போது குறுக்கிட்ட மனோ கணேசன் எம். பி., டயானாவின் கருத்தை முற்றாக நிராகரிப்பதாகவும், தமிழ் தமிழ் என கத்த வேண்டாம் என்றும் அது இங்கு வேறு அர்த்தம் தருவதாகவும் பொதுவாக இந்திய திரைப்படங்கள் என பயன்படுத்த வேண்டுமே தவிர தமிழ் திரைப்படங்கள் என இன ரீதியாக பார்க்கக்கூடாது என தெரிவித்தார்.

இதனால் இருவருக்கும் இடையே கடும் வாக்குவாதம் ஏற்பட்டது.

வன்முறை காட்சிகள் அனைத்து மொழி திரைப்படங்களிலும் இடம்பெறுகின்றன. தமிழ் திரைப்படங்களாலே மக்கள் உள ரீதியாக பாதிக்கப்படுகிறார்கள் என்பதை எந்த விதத்திலும் ஏற்றுக்கொள்ள முடியாது என மனோ கணேசன் தெரிவித்தார். (ஐ)

## “எம்.பிக்களின் எண்ணிக்கை அதிகரிக்கும்”

# புதிய பாராளுமன்ற கட்டட திறப்பு விழாவில் பிரதமர் மோடி!

இந்தியாவின் புதிய நாடாளுமன்ற கட்டடம் திறக்கப்பட்டுள்ளது. சர்வ மத பிரார்த்தனைகளுக்குப் பின்னர் அதற்கான கல்வெட்டை பிரதமர் மோடி திறந்து வைத்துள்ளார். பின்னர், தமிழ் மறைகள் ஓத மக்களவையில் சபாநாயகர் இருக்கைக்கு அருகே தமிழ் நாட்டு செங்கோலை பிரதமர் மோடி நிறுவியுள்ளார்.

நாடாளுமன்ற வளாகத்தில் உள்ள காந்தி சிலை அருகே காலை 7.30 மணிக்கு பூஜையுடன் புதிய நாடாளுமன்ற கட்டடத்தின் திறப்பு விழா தொடங்கியது. இதில் பிரதமர் மோடி, மக்களவை சபாநாயகர் ஓம்பிர்லா, மாநிலங்களவை துணைத்தலைவர் ஹரிவன் நாராயண்சிங் உள்ளிட்ட முக்கிய பிரமுகர்கள் கலந்துகொண்டனர். இஸ்லாம், கிறிஸ்தவம், பௌத்தம் உள்ளிட்ட சர்வ மத பிரார்த்தனை நடைபெற்றது.

அதனைத் தொடர்ந்து, புதிய நாடாளுமன்ற கட்டடத்தை நாட்டுக்கு பிரதமர் மோடி அர்ப்பணித்தார். மக்களவை சபாநாயகர் ஓம் பிர்லா உடனிருக்க, புதிய நாடாளுமன்ற கட்டடத்திற்கான கல்வெட்டை பிரதமர் மோடி திறந்து வைத்தார்.

பின்னர், தமிழ் மறைகள் முழங்க செங்கோல் பிரதமர் மோடியிடம் வழங்கப்பட்டது. செங்கோலை கையில் ஏந்தியபடி ஆதீனங்களிடம் பிரதமர் மோடி ஆசி பெற்றார்.

பின்னர், புதிய நாடாளுமன்ற கட்டிடத்தின் மக்களவையில் சபாநாயகர் இருக்கைக்கு அருகில் கண்ணாடி பெட்டிக்குள் செங்கோலை பிரதமர் மோடி நிறுவினார்.

செங்கோலை நிறுவிய பின்னர் பிரதமர் மோடி, சபாநாயகர் ஓம் பிர்லா ஆகியோர் குத்துவிளக்கை ஏற்றி வைத்தனர். இந்த நிகழ்ச்சியில் தமிழகத்தில் இருந்து திருவாவடுதுறை ஆதீனம் அம்பலவாண தேசிக பரமாச்சாரிய சாமிகள் தலைமையில் 20 ஆதீனங்கள் பங்கேற்றனர்.

### சாவர்க்கர் படத்திற்கு பிரதமர் மோதி மரியாதை

இன்று பிறந்த நாள் காணும் சாவர்க்கருக்கு பிரதமர் மோடி மரியாதை செலுத்தியுள்ளார். புதிய நாடாளுமன்ற கட்டடத்தின் மைய மண்டபத்தில் வைக்கப்பட்டிருந்த சாவர்க்கர் புகைப்படத்திற்கு அவர் மலர் தூவி மரியாதை செய்தார். மக்களவை சபாநாயகர் ஓம் பிர்லா, மத்திய அமைச்சர்கள், எம்.பி.க்கள் பலரும் சாவர்க்கருக்கு மரியாதை செலுத்தினர்

நண்பகல் 12 மணிக்கு நாடாளுமன்ற புதிய கட்டட திறப்பு விழாவின் இரண்டாம் கட்ட நிகழ்வுகள் தொடங்கின. மக்களவையில் தேசிய கீதம் ஒலிக்க தொடங்கிய இந்த நிகழ்வில் நாடாளுமன்ற உறுப்பினர்கள், பல்வேறு மாநில முதலமைச்சர்கள் மற்றும் சிறப்புப் பிரதிநிதிகள் பங்கேற்றனர்.

நிகழ்வில் குடியரசு துணைத் தலைவர் ஜெகதீஷ் தங்காரின் உரையை மாநிலங்களவை துணைத் தலைவர் ஹரிவன்ஷ் வாசித்தார். அதில், “இந்த நாள் முக்கியமான மைல் கல்லாகும். இது நல்ல காலத்தில் உத்வேகத்தின் தொடக் கமாக இருக்கும். பிரதமர் மோடி தலைமையில் புதிய நவீன நாடாளுமன்ற கட்டடம் இரண்டரை ஆண்டுகளில் கட்டி முடிக்கப்பட்டிருப்பது மகிழ்ச்சியளிக்கும் விஷயம்” என்று குடியரசுத் துணைத்தலைவர் குறிப்பிட்டிருந்தார்.





நிகழ்வில் பேசிய மக்களவை சபாநாயகர் ஓம் பிர்லா, “இந்தியாவின் அந்தஸ்து உலக அரங்கில் உயர்ந்துள்ளது. நமது நாடாளுமன்றம் உள்நாட்டு மற்றும் சர்வதேச சவால்களை வாய்ப்புகளாக மாற்றும் திறன் பெற்றது. வலுவான எதிர்காலத்திற்கு ஜனநாயகமே சிறப்பான அடித்தளமாகும். வேற்றுமையில் ஒற்றுமையே நமது பலம்.” என்று குறிப்பிட்டார்.

நிகழ்வின் தொடர்ச்சியாக, பிரதமர் மோடியுடன் மக்களவை சபாநாயகர் ஓம் பிர்லா, மாநிலங்களவை துணைத் தலைவர் ஹரிவன்ஷ் ஆகியோரும் இணைந்து புதிய அஞ்சல் தலையை வெளியிட்டனர். பின்னர், இந்தியாவின் 75-வது சுதந்திர தினத்தைக் குறிப்பிடும் வகையில் புதிய 75 ரூபாய் நாணயத்தை பிரதமர் மோதி வெளியிட்டார்.

### செங்கோலின் பெருமை உரைத்த பிரதமர்

அதனைத் தொடர்ந்து பிரதமர் மோடி உரையாற்றினார். அவர் பேசுகையில், ‘ஒவ்வொரு நாட்டின் வளர்ச்சிக்கான பயணத்தில் சில தருணங்கள் சாகா வரம் பெற்றவையாக நிலைத்துவிடும். இந்த மே 28-ம் தேதி அது போன்ற நாள். புதிய நாடாளுமன்றம் வெறும் கட்டடம் அல்ல. இந்தியாவில் உள்ள 140 கோடி மக்களின் ஆசையின் சின்னம் இது. இந்தியாவின் உறுதிப்பாட்டை இந்த உலகிற்கான தகவலாக இது அளிக்கிறது. புதிய நாடாளுமன்ற கட்டடம் சுயாதீன இந்தியாவின் எழுச்சிக்கான அடையாளமாக இருக்கும்.

புனிதமான செங்கோல் நாடாளுமன்றத்திற்குள் இன்று நிறுவப்பட்டுள்ளது. “சோழ அரசில் இந்த செங்கோல் நீதி, நேர்மை, நல்ல நிர்வாகம் ஆகியவற்றை அடையாளப்படுத்தும் ஒன்றாக விளங்கியுள்ளது. அத்தகைய புனித செங்கோலின் பெருமையை மீட்டெடுக்க முடிந்திருப்பது நமக்கு அதிர்ஷ்டம்தான். இந்த அவையில் அலுவல்கள் தொடங்கும் போதெல்லாம் செங்கோல் நமக்கு உத்வேகம் தரும்.” என்று குறிப்பிட்டார்.

மேலும் தொடர்ந்த பிரதமர் மோடி “பல்லாண்டு நீடித்த அந்நிய ஆட்சி நம் பெருமைகளை களவாடிவிட்டது. இன்று இந்தியா அந்த அடிமை மனோபாவத்தில் இருந்து வெளியே வந்துவிட்டது. புதிய நாடாளுமன்றத்திற்கான தேவை இருந்தது. நாடாளுமன்றத்தின் மொத்த இடங்கள் மற்றும் எம்.பி.க்களின் எண்ணிக்கையை வருங் காலத்தில் அதிகரிப்பதை காணவிருக்கிறோம். ஆகவே, புதிய நாடாளுமன்றத்தை நிர்மாணிப்பது காலத்தின் தேவையாக இருந்தது.”என்று தெரிவித்தார்.

### மல்யுத்த வீராங்னைகள் தடுத்து வைப்பு

இந்திய மல்யுத்த கூட்டமைப்புத் தலைவரும் பா.ஜ.க. எம்.பி.யுமான பிரிஜ் பூஷன் சிங் மீது பாலியல் குற்றச்சாட்டுகளை சுமத்தி டெல்லி ஜந்தர் மந்தரில் வாரக்கணக்கில் போராட்டத்தை தொடரும் மல்யுத்த வீராங்கனைகள் புதிய நாடாளுமன்றத்தை நோக்கி பேரணியாக செல்ல முற்பட்டனர். ஆனால், அவர்களை ஜந்தர் மந்தரிலேயே பாதுகாப்புப் படையினர் தடுத்து வைத்துள்ளனர். பாதுகாப்புப் படையினரை மீறி ஜந்தர் மந்தர் போராட்டக் களத்தில் இருந்து மல்யுத்த வீரர், வீராங்கனைகள் வெளியேற முற்பட்ட போது இரு தரப்பினருக்கும் இடையே தள்ளுமுள்ளு ஏற்பட்டது.

புதிய நாடாளுமன்றத்தை நோக்கி பேரணியாக செல்ல முற்பட்ட மல்யுத்த வீராங்னைகளின் நோக்கம், புதிய நாடாளுமன்றத்திற்கு முன்பு மகளிர் மகா பஞ்சாயத்தை நடத்த வேண்டும் என்பதே. பிரிஜ் பூஷன் சிங்கால் பாதிக்கப்பட்ட பெண்களுக்கு நீதி கிடைக்கும் வரை போராட்டத்தைத் தொடர அவர்கள் உறுதி பூண்டிருக்கின்றனர்.

### 19 எதிர்க்கட்சிகள் கூட்டாக புறக்கணிப்பு

புதிய நாடாளுமன்றக் கட்டடத்தை பிரதமர் மோடிக்குப் பதிலாக குடியரசு தலைவர் திரௌபதி முர்மூ திறந்து வைக்க வேண்டும் என்ற கோரிக்கையை மத்திய அரசு நிராகரித்துவிட்டதால் காங்கிரஸ், திமுக, ஆம் ஆத்மி, திரிணாமுல் காங்கிரஸ் உள்ளிட்ட 19 எதிர்க்கட்சிகள் இந்த விழாவை கூட்டாக புறக்கணித்துள்ளன. கர்நாடக தேர்தல் முடிவுகள் வெளியான பின்னர் டெல்லியில் வேகமாக மாறும் அரசியல் காட்சிகளின் நீட்சி, புதிய நாடாளுமன்ற திறப்பு விழா விவகாரத்திலும் பிரதிபலிக்கிறது.

பாரதிய ஜனதாவுக்கு எதிரான தேசிய அரசியலில் காங்கிரசுடன் சேராமல் விலகியே நின்ற ஆம் ஆத்மியும், திரிணாமுல் காங்கிரசும் இம்முறை சத்தமின்றி ஒரே அணியில் இணைந்துள்ளன. திமுக, வி.சி.க., மதிமுக, சிவசேனா, சமாஜ்வாதி, மத சார்பற்ற ஜனதா தளம், ராஷ்டிரிய ஜனதா தளம், தேசியவாத காங்கிரஸ் மற்றும் இடது சாரிகள் என 19 கட்சிகள் நாடாளுமன்ற புதிய கட்ட திறப்பு விழாவை புறக்கணித்துள்ளன.

### புதிய நாடாளுமன்ற கட்டடம்

செண்ட்ரல் விஸ்டா திட்டத்தின் கீழ் புதிய நாடாளுமன்றக் கட்டடம் கட்டப்பட்டுள்ளது. இந்த மொத்த திட்டத்திற்கும் 20 ஆயிரம் கோடி ரூபாய் செலவு செய்யப்பட்டுள்ளது.

ராஜ்பத்திற்கு அருகேயுள்ள பகுதி சென்ட்ரல் விஸ்டா என அழைக்கப்படுகிறது. குடியரசுத் தலைவர் மாளிகை, நாடாளுமன்றம், நார்த் பிளாக், சவுத் பிளாக், துணை ஜனாதிபதி இல்லம் ஆகியவையும் சென்ட்ரல் விஸ்டாவின் கீழ் வருகின்றன.



புதிய நாடாளுமன்றத்தில் உள்ள மக்களவை கட்டடம் தேசிய பறவையான மயில் என்ற கருப்பொருளிலும், மாநிலங்களவை தேசிய மலரான தாமரை என்ற கருப்பொருளிலும் வடிவமைக்கப்பட்டுள்ளது.

பழைய மக்களவையில் அதிகபட்சமாக 552 பேர் மட்டுமே அமர முடியும் என்ற நிலையில், புதிய அவையில் 888 இருக்கைகள் உள்ளன.

பழைய மாநிலங்களவை கட்டடத்தில் 250 உறுப்பினர்கள் மட்டுமே அமர முடியும் நிலையில், புதிய அவையில் 384 பேர் அமர முடியும்.

நாடாளுமன்றத்தின் கூட்டு அமர்வின்போது 1272 பேர் அமரும் வகையில் புதிய கட்டடம் உள்ளது.

### புதிய நாடாளுமன்ற கட்டடத்தின் வேறு சிறப்புகள்

“காகிதமில்லா அலுவலகங்கள்” என்ற இலக்கை நோக்கி நகரும் வகையில், நவீன டிஜிட்டல் வசதிகளுடன் புதிய கட்டடத்தில் அனைத்து எம்.பி.க்களுக்கும் தனி அலுவலகம் ஒதுக்கப்படும் என அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

புதிய கட்டடத்தில் இந்தியாவின் ஜனநாயக பாரம்பரியத்தை சித்தரிக்கும் வகையில் பிரமாண்ட அரசியலமைப்பு மண்டபம் இருக்கும். இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் அசல் அங்கு வைக்கப்படும்.

எம்.பி.க்கள் அமர பெரிய அறை, நூலகம், சாப்பாட்டு அறைகள் மற்றும் அதிகப்படியான பார்க்கிங் வசதிகள் புதிய நாடாளுமன்ற வளாகத்தில் இருக்கும்.

இந்த முழு திட்டத்தின் கட்டுமானப் பகுதி 64,500 சதுர மீட்டர். புதிய நாடாளுமன்றத்தின் பரப்பளவு தற்போதுள்ள பாராளுமன்ற கட்டிடத்தை விட 17,000 சதுர மீட்டர் அதிகம்.

சுதந்திரத்திற்கு முன் பாராளுமன்ற கட்டடம் கட்டப்பட்டபோது, பாதாள சாக்கடை, குளிரூட்டும் வசதி, தீ பாதுகாப்பு, சிசிடிவி, ஆடியோ வீடியோ ஆகியவை கவனத்தில் எடுக்கப்படவில்லை என அரசு கூறுகிறது.

தற்போது மாறிவரும் காலத்திற்கு ஏற்ப நாடாளுமன்ற வளாகத்தில் அவை சேர்க்கப்பட்டாலும், கட்டடத்தில் ஈரப்பதம் போன்ற பிரச்னைகளால் தீ விபத்து ஏற்படும் அபாயம் அதிகரித்துள்ளது.

பாதுகாப்பு - சுமார் 100 ஆண்டுகளுக்கு முன் நாடாளுமன்ற கட்டடம் கட்டப்பட்ட போது, நில அதிர்வு மண்டலம்-2இல் டெல்லி இருந்தது. ஆனால் தற்போது நான்காம் நிலையை டெல்லி எட்டியுள்ளது.

# தையிட்டி விகாரைதான் கடைசியா?

நிலாந்தன்

தையிட்டி விகாரை திறக்கப்பட்டு விட்டது. நிலத்தைக் கைப்பற்றி வைத்திருக்கும் ஒரு தரப்பு இதுபோன்ற விடயங்களைச் செய்யமுடியும். அந்த விகாரை விவகாரத்தை நொதிக்கச் செய்தது தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி தான். அதேசமயம் அந்த விவகாரமானது தமிழரசியலின் இயலாமையை நிரூபிக்கும் ஆகப் பிந்திய எடுத்துக்காட்டுகளில் ஒன்று.

அந்த விகாரை ஒரு விவகாரமாக மாறிய பின் அண்மையில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அஸ்கிரிய பீடாதிபதியை சந்தித்திருந்தார். அதன்போது அஸ்திரிய பீடாதிபதி அவரிடம் கையளித்த எழுத்து மூல ஆவணம் ஒன்றின் மொழிபெயர்ப்பு தமிழில் ஊடகங்களில் வெளிவந்தது. அதி,அஸ்கிரிய பீடாதிபதி முக்கியமான சில விடயங்களை அழுத்திக் கேட்டிருக்கிறார். "வடக்கு, கிழக்கு மாகாணங்களில் உள்ள விகாரைகள் மற்றும் நாடு முழுவதிலுமுள்ள வரலாற்று சிறப்புமிக்க வணக்கஸ்தலங்கள் உறுதிப்படுத்தப்பட வேண்டும்" என்று அவர் கேட்டிருக்கிறார்.

அந்தச் சந்திப்பு நிகழ்வதற்கு கிட்டத்தட்ட பத்து நாட்களுக்கு முன் இம்மாதம் 11 ஆம் திகதி ஜனாதிபதி தமிழ்க் கட்சிப் பிரதிநிதிகளைச் சந்தித்தார். அதில் தொல்லியல் திணைக்களத்தின் பணிப்பாளரும் அழைக்கப்பட்டிருந்தார். அச்சந்திப்பில் தொல்லியல் திணைக்களத் தலைவர், திணைக்களத்துக்கு ஒதுக்கப்பட்ட நிதியைவிட மேலதிக நிதியை வெளித்தரப்புகளிடமிருந்து குறிப்பாக பௌத்த மத குருக்களிடமிருந்து பெறுவதாகக் கூறியிருக்கிறார். ஜனாதிபதி அதனை எதிர்த்துக் கேள்வி கேட்கின்றார். ஓர் அரச திணைக்களம் அவ்வாறு வெளியில் இருந்து நிதி உதவியைப் பெற முடியாது என்று சுட்டிக்காட்டியிருக்கிறார். ஆனால் அஸ்கிரிய பீடாதிபதி அவ்வாறு நிதி உதவி பெறுவதை அனுமதிக்குமாறு தனது கடிதத்தில் கேட்டிருக்கிறார்.

அதாவது சக்திமிக்க பௌத்த மத பீடங்களில் ஒன்று சிங்கள பௌத்த மயமாக்கலை ஊக்குவிக்கும் விதத்தில் ஜனாதிபதிக்கு எழுத்துமூல ஆவணம் ஒன்றை வழங்கியிருக்கிறது. அதேசமயம் உயர் மட்டத்தில் இல்லாத சில பௌத்த மதகுருக்கள் தையிட்டி விவகாரம் தொடர்பாக தமிழிலும் சிங்களத்திலும் கருத்துக்களைத் தெரிவித்திருக்கிறார்கள். இதில் நயினாதீவு விகாரதிபதியின் கருத்துக்கள் சிங்கள மக்களுக்கு சிங்களத்தில் சொல்லப்பட வேண்டியவை.

இலங்கைத்தீவில் மத நல்லிணக்கத்தை பொறுத்தவரை அது பெரும்பான்மையிடமிருந்துதான் தொடங்க வேண்டும். தென்னிலங்கையில் அது சிங்கள பௌத்தர்களிடமிருந்து தொடங்க வேண்டும்.



தமிழ்ப்பகுதிகளில் அது இந்துக்களிடமிருந்து தொடங்க வேண்டும். ஆனால், அதேசமயம் மேற்படி பௌத்த மதகுருக்களில் ஒருவரான பொகவந்தலாவை ராகுல தேரர் தமிழ் பௌத்தர்களைப் பற்றிக் கதைக்கின்றார். தையிட்டி திஸ்ஸ விகாரை தமிழ் பௌத்தர்களிடம் கையளிக்கப்படும் என்று கூறுகிறார். தமிழ் பௌத்தம் என்பது தமிழ் மக்களின் வரலாற்றில் ஒரு கட்டம். ஆனால் இப்பொழுது தமிழ் பௌத்தர்கள் யாழ்ப்பாணத்தில் எத்தனை பேர் உண்டு?

சாதாரண தமிழ் மக்களைப் பொறுத்தவரை பௌத்தம் என்பது ஆக்கிரமிப்பின் குறியீடாகவே பார்க்கப்படுகின்றது. தமிழ் மக்களில் ஒரு பகுதியினர் ஒரு கால கட்டத்தில் பௌத்தர்களாக இருந்திருக்கிறார்கள் என்பது ஒரு வரலாற்று உண்மை. இந்தியாவில் தோன்றிய பௌத்தம் ஆசியா முழுவதும் பரவிய பொழுது அது தமிழ் மக்கள் மத்தியிலும் பரவியது. தமிழின் காப்பிய காலம் எனப்படுவது சமண பௌத்த காலம்தான். தமிழில் உள்ள ஐந்து காப்பியங்களும் ஒன்றில் பௌத்த காப்பியங்கள் அல்லது சமண காப்பியங்கள் தான். பின்னர் நாயன்மார்களின் எழுச்சியோடு சைவம் பௌத்தத்தை வெற்றி கொண்டது. மதங்களுக்கிடையிலான பூசல்களும், அனல்வாதம் புனல் வாதம் போன்றவற்றில் பிற மதத்தவர்களை வென்றதும் தமிழ் வரலாற்றின் ஒரு பகுதி. அது போலவே தமிழ் மக்களில் ஒரு பகுதியினர் கிறிஸ்தவர்களாக மதம் மாறியதும் இஸ்லாமியர்களாக மதம் மாறியதும் தமிழ் வரலாற்றின் ஒரு பகுதி.

தமிழ் அடையாளம் ஒரு மதத்துக்கு மட்டும் உரியதல்ல என்று அறிஞர்கள் கூறுவர். பூர்வ காலங்களில் தமிழர்கள் இயற்கையை வழிபட்டார்கள். அதன்பின் சமணமும் பௌத்தமும் தமிழ்மக்கள் மத்தியில் பரவின. அதன்பின் பக்தி இலக்கியம். அதன் பின் கிறிஸ்தவம், இஸ்லாம். அதன்பின் ஈழத்தில் ஆயுதப் போராட்டமும் அதன் விளைவாக ஏற்பட்ட புலப்பெயர்ச்சியும். இப்படியாக பூர்வ காலங்களில் தொடங்கி இன்று வரையிலும் தமிழ் அடையாளத்தை வெவ்வேறு மதங்கள் செதுக்கியிருக்கின்றன. வெவ்வேறு கோட்பாடுகள் செதுக்கியிருக்கின்றன. வெவ்வேறு நம்பிக்கைகள் செதுக்கியிருக்கின்றன. ஈழப் போராட்டம் செதுக்கியது. புலப்பெயர்ச்சி செதுக்கியது. புலப்பெயர்ச்சி தமிழர்களை தாயகத்துக்கு வெளியே சிதறடித்துவிட்டது. அதனால், தமிழ் அடையாளம் எனப்படுவது சில அறிஞர்கள் சுட்டிக்காட்டுவதுபோல எல்லை கடந்த ஓர் அடையாளம். அது ஓர் அரசியல் எல்லைக்குள் குறுக்கப்பட முடியாத அனைத்துலக அடையாளம்.

குறிப்பாக கீழடி ஆய்வுகள் இந்திய வரலாற்றை தமிழில் இருந்து தொடங்கத் தேவையான சான்றுகளை வெளிக்கொண்டு வருவதாக அறிஞர்கள் சுட்டிக் காட்டுகின்றார்கள். எனவே தமிழர்கள் தமது மொழியின் தொன்மை மற்றும் அனைத்துலக இருப்பைக் குறித்துப் பெருமைப்பட வேண்டும். இந்த அடிப்படையில் சிந்தித்தால், ஒரு காலம் தமிழில் பௌத்தம் நிலவியது என்பது வரலாற்று உண்மை.

ஆனால் பௌத்தம் ஒரு மதமாக இருக்கும்வரை பிரச்சனை இல்லை. அது ஒரு இனத்தின் ஆக்கிரமிப்புத் தத்துவமாக, ஆக்கிரமிப்பின் கருவியாக மாறும் பொழுதுதான் பிரச்சினையே வருகிறது. இலங்கைத்தீவின் இனப்பிரச்சினையே அதுதான். மதம், மொழி, இனம், நிலம் ஆகியவற்றை இணைத்து உருவாக்கப்பட்ட "தம்மதுவீப" கோட்பாடு அதுவென்று மு. திருநாவுக்கரசு கூறுகிறார்.

சிங்கள பௌத்தம் ஓர் ஆக்கிரமிப்புக் கொள்கையாக மாறிய பின் அது தமிழ் பௌத்தத்தை கையில் எடுத்தால் அதுவும் ஓர் ஆக்கிரமிப்பு உத்தி என்றுதான் தமிழ் மக்கள் பார்ப்பார்கள். சிங்கள பௌத்தமானது ஏனைய மதங்களின் இருப்பை அங்கீகரிக்குமாக இருந்தால் குறிப்பாக யாப்பில் இப்பொழுது சிங்கள பௌத்தத்துக்கு வழங்கப்பட்டிருக்கும் முன்னுரிமையை நீக்கி இலங்கைத்தீவின் மதப்பல்வகைமையை ஏற்றுக்கொள்ளும் ஒரு யாப்பை உருவாக்கச் சிங்கள அரசியல்வாதிகள் தயாரா? இங்கு பிரச்சனை மதப்பல்வகைமை அல்ல மத மேலாண்மைதான். சிங்கள பௌத்தம் ஒரு மத மேலாண்மைக் கோட்பாடு என்பதுதான்.

ஆதித் தமிழ் பௌத்தர்கள் பெருமளவுக்கு மகாயான பௌத்தத்தை சேர்ந்தவர்கள் என்று வரலாற்று அறிஞர்கள் கூறுகிறார்கள். அதேசமயம் சிங்கள பௌத்தர்கள் தாங்கள் பின்பற்றுவது தேரவாத பௌத்தம் என்று கூறிக் கொள்கிறார்கள். ஆனால் தென்னிலங்கையில் பிரயோகத்தில் இருப்பது மகாயான பௌத்தந்தான் என்று பேராசிரியர் கணணாத் ஓபயசேகர கூறுகிறார். தேரவாத பௌத்தத்துக்கும் மகாயான பௌத்தத்துக்கும் இடையிலான முரண்பாடுகளின்போது இலங்கை வரலாற்றில் மன்னர்களின் காலத்தில் கொலைகள் இடம்பெற்றிருக்கின்றன. மகாயான பௌத்தம் அதிகம் இந்து மதப் பண்புகளை உள்வாங்கியது என்றும், இலங்கைத்தீவில் உள்ள மகாயான, தேரவாத பௌத்த பிரிவுகளுக்கு இடையிலான முரண்பாடுகளை இன ரீதியாகவும் வியாக்கியானம் செய்யலாம் என்றும் கூறும் அறிஞர்கள் உண்டு.

இவ்வாறான அரசியல், பொருளாதார, இராணுவ, மத கலாச்சாரப் பின்னணிக்குள் சில பௌத்த மத குருக்கள் தமிழ் பௌத்தத்தைப் பற்றிக் கதைப்பதனை தமிழ் மக்கள் சந்தேகத்தோடுதான் பார்ப்பார்கள். மேற்படி பிக்கு கூறுகிறார் கட்டப்பட்ட விகாரைகளை இடிக்க முடியாது என்று. ஒரு நிலத்தை ஆக்கிரமித்து வைத்துக்கொண்டு அதில் விகாரைகளைக் கட்டிவிட்டு அதன் பின் விகாரைகளை இடித்தால் அது மத நல்லிணக்கத்தை குழப்பி விடும் என்று கூறுவது ஆக்கிரமிப்பை நியாயப்படுத்தும் ஒரு தர்க்கம் தான். தையிட்டியில் மட்டுமல்ல தமிழ் பகுதிகளில் இப்பொழுது தமிழ் பௌத்தர்கள் ஒரு சமூகமாக இல்லை. தமிழ்ப் பகுதிகளில் சிங்கள பௌத்தர்களான படைத்தரப்புத்தான் ஆயுதங்களோடு குந்தியிருக்கின்றது. தமிழ்மக்கள் அவர்களை ஆக்கிரமிப்பு படையாகத்தான் பார்க்கின்றார். ஒரு மதத்தின், ஒரு இனத்தின் மேலாண்மையை பாதுகாக்கும் ஒரு படையாகத்தான் பார்க்கின்றார்கள். இன, மதப் பல்வமையைப் பாதுகாக்கும் ஒரு படையாகப் பார்க்கவில்லை. எனவே இந்த நாடு இன மதப் பல்கைமையை ஏற்றுக்கொள்ளும் ஒரு யாப்பை உருவாக்கட்டும். அப்பொழுது தமிழ் பௌத்தம் ஒரு பிரச்சினையே இல்லை.

இப்பொழுது மீண்டும் தையிட்டி விகாரைக்கு வருவோம். இந்த விடயத்தில் மேற்சொன்ன சில அதிகாரமற்ற பிக்குக்கள் சொல்லும் கருத்துக்களை விடவும் அதிகாரம்மிக்க அஸ்கிரிய பீடாதிபதியின் கருத்துக்களே அரசியல் பரிமாணமுடையவை. அப்படிப் பார்த்தால் தாமரை மொட்டு கட்சியின் பிரதிநிதியாகக் காணப்படும் ரணில் விக்கிரமசிங்க, தொடர்ந்து சிங்கள பௌத்த மயமாக்கலை முன்னெடுக்கக்கூடிய வாய்ப்புக்களே தெரிகின்றன.

அடுத்த ஆண்டு இறுதியில் அவர் ஜனாதிபதித் தேர்தலை நடத்த வேண்டும். அப்பொழுது எதிரணியின் ஒரு பொது வேட்பாளராக சம்பிக்க ரணவக்க நிறுத்தப்படலாம் என்ற ஊகங்கள் உண்டு. சம்பிக்க சிங்கள பௌத்தர்களைக் கவரக்கூடியவர். அதேசமயம் அரகலய போராட்டத்தின் பங்காளிகளிலும் ஒருவர். எனவே அவரை எதிர்கொள்வது என்றால் ரணில் விக்கிரமசிங்க சிங்கள பௌத்தர்களைக் கவரவேண்டும். அதோடு ஐ.எம்.எப்பின் நிபந்தனைகளை ஏற்பதால் சிங்கள மக்கள் மத்தியில் ஏற்படக்கூடிய எதிர்ப்பலைகளைத் திசை திருப்பவும் அது உதவும்.

அதாவது அடுத்த ஆண்டு ஜனாதிபதித் தேர்தலை நோக்கித்தான் அவர் உழைக்கின்றார். சிங்கள பௌத்தத்தின் காவலனாக அவர் தன்னைக் காட்டிக் கொள்ள வேண்டியிருக்கிறது. மேற்கத்தைய உடுப்புகளையணிந்து, மேற்கத்திய பாரம்பரியத்தைப் பின்பற்றும் ரணில், பாரம்பரிய உடையணிந்து சிங்கள பௌத்த கடும்போக்காளர்களைப் பிரதிபலிக்கும் சம்பிக்க ரணவக்கைவை எதிர்கொள்ள வேண்டியிருக்கலாம். அதற்கு ஒரே வழி சிங்கள பௌத்தர்களைத் திருப்திப்படுத்துவதுதான். அப்படிப்பார்த்தால் தையிட்டி விகாரை இறுதியானது அல்ல என்று எடுத்துக் கொள்ளலாமா?



ஈழநாடு



# பேராசிரியர்கள் ஒன்றிணைந்தால் வட, கிழக்கு கல்வியில் உச்சம்பெறும்

## கலாநிதி ஆறு. திருமுருகன்

யாழ்ப்பாணம், மே 30

பேராசிரியர்கள் ஒன்றிணைந்து செயல்படுவார்கள் என்றால் வடக்கு, கிழக்கு மற்றும் மலையகத்தை கல்வியால் உச்சத்துக்கு கொண்டுவர முடியும் என்று கலாநிதி ஆறு. திருமுருகன் தெரிவித்துள்ளார்.

இளைய தலைமுறை ஆற்றலாளர் விருது வழங்கும் நிகழ்வு தெல்லிப்பழை துர்க்காதேவி தேவஸ்தான அன்னபூரணி மண்டபத்தில் நடைபெற்றது. இந்த நிகழ்வில் உரையாற்றியபோதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

பேராசிரியர்கள், சமூகப் பொறுப்பாளர்கள், சான்றோர்கள் ஒன்றுகூடி நிலைபேறான அபிவிருத்தி தொடர்பில் சிந்திக்க வேண்டும் பேராசிரியர்கள் நல்லதை நினைப்பார்கள் என்றால் வடக்கு, கிழக்கு, மலையகத்தை கல்வியால் உச்சத்துக்குக் கொண்டு வரமுடியும்.

பல்கலைக்கழகத்துக்குள் மாத்திரம் பேராசிரியர்கள் இருக்காது சமூகத்தில் இறங்கி சமூகத்தைப் பாதுகாக்க முன்வரவேண்டும். யாழ். பல்கலைக்கழத்தில் தற்போதுள்ள துணைவேந்தரின் காலத்தில் பல பேராசிரியர்கள் உருவாகி வருகின்றார்கள். இவ்வாறாக வருகின்ற அனைத்துப் பேராசிரியர்களும் ஒன்றிணைந்து சமுதாயத்தை முன்னேற்ற வேண்டும். அது மட்டுமின்றி துணைவேந்தர் பல்கலைக்கழகத்துக்கு புதிய பாடத்திட்டம் ஒன்றை ஆரம்பிக்க வேண்டும் என்றால் அதற்கு காணிகள்,



கட்டடங்கள் இல்லை என்று அந்தத் திட்டத்தை கைவிடாது தெல்லிப்பழை துர்கை அம்மன் ஆலயத்தை தொடர்பு கொண்டால் நாம் அதற்கான வழி அமைத்துத் தருவோம்.

யாழ்ப்பாணத்துக்கு திருமண மண்டபங்கள் போதும் இனி கல்வி மண்டபங்கள் உருவாக வேண்டும். தொழில்சாலைகள் உருவாகவேண்டும். இதன்மூலம் கல்வி கற்றலிலிருந்து இடைவிலகிய மாணவர்கள், வேலை வாய்ப்பில்லாதவர்களுக்கு உரிய பயிற்சிகளை வழங்கி வேலை வாய்ப்புக்களை வழங்க முன்வரவேண்டும்

தற்போதைய சூழலில் தனியார் பல்லைகழகங்களுக்கு அனுமதி வழங்கப்பட்டு வருகின்றது. இத்தகைய அனுமதிகளைப் பெற்று தனியார் பல்கலைக்கழகங்கள் இங்கும் உருவாகின்றபோது வாள்வெட்டு கலாசாரம், போதைவஸ்து கலாசாரம் இல்லாது போகும் நிலை ஏற்படும். எனவே, பேராசிரியர்கள், கல்விமான்கள், சமுதாயப் பெரியார்கள், சான்றோர்கள் ஒன்றுகூடி இதற்கான முயற்சிகளை எடுக்கவேண்டும்.

எமதுபிரதேசத்தை அழகாக்குவதற்கு தெற்கில் இருந்து யாரும் வரவேண்டியது இல்லை. நாங்களே அதனை செய்ய முன்வரவேண்டும் - என்றார். (ஐ)

# போலி கடவுச்சீட்டுடன் கைதான சீனர் சீனாவில் தேடப்படும் குற்றவாளியாம்!

கொழும்பு, மே 30

போலி கடவுச்சீட்டுகளை வைத்திருந்ததை தொடர்ந்து, சீனாவுக்கு நாடு கடத்தப்பட்டதை எதிர்த்து எழுத்தாணை மனு தாக்கல் செய்த சீனப் பிரஜை, போதைப்பொருள் குற்றச்சாட்டில் சீனாவில் தேடப்படும் நபர் என்று சட்டமா அதிபர் நேற்று மேன்முறையீட்டு நீதிமன்றத்துக்கு அறிவித்தார்.

தன்னை சீனாவுக்கு நாடு கடத்தியதை சவாலுக்கு உட்படுத்தி சீன பிரஜை தாக்கல் செய்த எழுத்தாணை மனு மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட போதே பிரதி சொலிசிட்டர் ஜெனரல் ஜனக பண்டார இதனைத் தெரிவித்தார்.

போதைப்பொருள் குற்றங்கள் தொடர்பான நிலுவையில் உள்ள வழக்கு தொடர்பாக சீன நீதிமன்றம் 2019ஆம் ஆண்டு இந்த நபருக்கு எதிராக பிடியாணை பிறப்பித்துள்ளதாக பிரதி சொலிசிட்டர் ஜெனரல் மேலும் தெரிவித்தார்.

இதேவேளை, மனுதாரர் விபான் சார்பில் முன்னிலையான ஜனாதிபதி சட்டத்தரணி சஞ்சீவ ஜெயவர்தன, விண்ணப்பத்தை மீளப் பெறுமாறு தனது கட்சிக்காரரிடம் இருந்து அறிவுறுத்தல்களைப் பெற்றுள்ளதாக நீதிமன்றில் அறிவித்தார்.

இதன்படி, மேன்முறையீட்டு நீதிமன்ற நீதியரசர்களான நிஸ்ஸங்க பந்துல கருணாரத்ன மற்றும் நீதியரசர் எம். ஏ. ஆர். மரிக்கார் ஆகியோர் மனுவை மீளப்பெற மனுதாரருக்கு அனுமதி அளித்து வழக்கை தள்ளுபடி செய்தனர். (ஐ)

# தொற்றுநோய் மருத்துவமனையில் பரீட்சை எழுதும் 18 மாணவர்கள்!

கொழும்பு, மே 30

தேசிய தொற்று நோய் மருத்துவமனையில் (ஐ. டி. எச்) கல்விப் பொதுத் தராதர சாதாரண தரப்பரீட்சை நிலையம் நிறுவப்பட்டுள்ளது.

அங்கு, டெங்கு நோயால் பாதிக்கப்பட்ட 18 மாணவர்கள் பரீட்சை எழுதுகின்றனர் என்று தேசிய தொற்று நோய் மருத்துவமனையின் பணிப்பாளர் மருத்துவர் தினேஷ் கொக்கலகே தெரிவித்தார்.

அத்துடன், இந்த மருத்துவமனையில் தற்போது 96 டெங்கு நோயாளர்கள் சிகிச்சை பெற்று வருகின்றனர் என்றும் அவர் கூறினார். (ஐ)







# கோடி கோடியாய் சம்பாதிக்கும் ஆலயங்கள் இந்துமக்களின் வறுமையை போக்கமுடியாதா?

## காரைதீவில் மேலதிகஅரச அதிபர் ஜெகதீசன் கேள்வி



காரைதீவு, மே 30

**"வறுமையை காரணம் காட்டி இந்து மக்கள் மதம் மாற்றப்படுகின்றார்கள் என்று கூக் குரலிடுகின்றோம். ஏன் இந்து தனவந்தர்களால், இந்து அமைப்புகளால் இந்து மக்களின் வறுமையை துன்பத்தைப் போக்குவதற்கு முடியாதா? கோடி கோடியாய் சம்பாதிக்கின்ற ஆலயங்களுக்கு இது முடியாதா?"**

-இவ்வாறு, அம்பாறை மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் வேதநாயகம் ஜெகதீசன் காரைதீவில் இடம் பெற்ற வைப வமொன்றில் உரையாற்றிய போது கேள்வி எழுப்பினார்.

இந்து ஸ்வயம் சேவக சங்கத் தின் அம்பாறை மாவட்ட கிளை, மாவட்டத்தில் உள்ள 360 பெண் கள் தலைமை தாங்கும் குடும்பங் களுக்கு தலா 25 கிலோ கோதுமை மற்றும் 25 கிலோ அரிசி என்பவற்றை வழங்கும் நிகழ்வு காரைதீவு விபுலானந்தா மணி மண்டபத்தில் நேற்று முன்தினம் நடைபெற்றது .

இந்து ஸ்வயம் சேவக சங்க அம்பாறை மாவட்ட தலைவர் இரா.குணசிங்கம் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் மேலதிக அரசாங்க அதிபர் மேலும் பேசுகையில்-

இந்து மக்கள் மக்களின் வறுமையினை பயன்படுத்தி மாற்று மதத்தினர் உதவியை செய்து மதம் மாற்றி வருகின்ற னர். இதனை தொடர்ச்சியாக காணக்கூடியதாக இருக்கின்றது. இந்த நிலைமையை ஏன் இந்து அமைப்புகளால் இணைந்து ஏன் நிவர்த்தி செய்ய முடியாது? அதுபோல கோடிக்கணக்கில் சம்பாதிக்கும் பெரிய பெரிய ஆலயங்கள் இந்த இந்து மக்க ளின் வறுமையினை அல்லது துயரை ஏன் துடைக்க முடியாது? அம்பாறை மாவட்டத்தில் இருக்கின்ற அதே போல் மட்டக் களப்பு மாவட்டத்தில் இருக் கின்ற பெரிய ஆலயங்கள் சேர்ந் தாலே இந்து மக்களின் வறு மையை நிச்சயம் போக்க முடியும்.

இறைவன் நேரடியாக வந்து மக்களின் பிரச்னைகளை தேவை களை ஒருபோதும் தீர்த்து வைப் பதில்லை. மாறாக சில மனிதர்க ளூடாக அமைப்புகளூடாக நம்மை போன்றவர்களை கருவி யாக பயன்படுத்தியே மக்களின் பிரச்னைகளை தேவைகளை தீர்த்து வைக்கின்றார்.

எனவே அந்த அமைப்பினர் மனிதாபிமானத்துடன் செயல் பட்டு இந்த மக்களின் வறுமையை போக்க முன்வர வேண்டும் என்று கூறி வருகின்றோம் ஆனால் அது அவர்களது காது களில் ஏறுவதாக இல்லை.

நாங்களும் ஒவ்வொரு கூட் டத்திலும் சொல்லிக் கொண்டி ருக்கின்றோம். ஆலயங்கள் தங் கள் திருவிழாக்கள் என்றால் மக் களிடம் கையேந்துகிறார்கள். அதே மக்கள் அனர்த்தத்தில் அல்லது நாட்டு பொருளாதார நெருக்கடியில் சிக்கித் தவிக்கின் றபொழுது அந்த மக்களுக்கு பெரிதாக உதவுவது இல்லை. இதுபோன்ற காரணங்களினால் அவர்கள் மதம் மாறுவதில் ஒரு பக்கம் நியாயமும் இருக்கின்றது. எனவே அந்த கேள்விக்குரிய விடை எம்மிடம் தான் உள்ளது என்பதனை மறந்து விட முடி யாது. இங்கு அமெரிக்காவில் வாழ்கின்ற இந்து அன்பர்கள் அளித்த அன்பளிப்பு இந்த மக்க ளுக்கு வழங்கப்படுகின்றது. அதையிட்டு அவர்களுக்குநன்றி கூறுகின்றோம் .ஆனால் இதை யிட்டு சந்தோசம் அடைய முடி யாது .ஏனென்றால் இங்குள்ள இந்து தனவந்தர்கள் அமைப்புக் கள் ஆலயங்கள் இந்த விடயத்தை கவனிக்க வேண்டும். அப்பொ ழுதுதான் இந்த மத மாற்றங்களை தவிர்க்கலாம் தடுக்கலாம். இங்கே இந்து சேவக சங்க அம்பாறை மாவட்ட கிளை பாரியதொரு பணியை செய்து வருவதையிட்டு சந்தோசமடைகின்றேன். மேல திக அரசாங்க அதிபர் என்ற வகையில் காரைதீவிலிருந்து ஏனைய தமிழ் கிராமங்களில் இருந்து புலம்பெயர்ந்து வெளி நாடுகளில் வாழ்கின்ற இந்து அன்பர்கள் இங்கு கஷ்டப்பட்டு வாழ்கின்ற இந்து மக்களுக்கு உதவுவதற்கு நீங்கள் நேசக்கரம் நீட்ட வேண்டும் என்று கேட் டுக் கொள்கின்றேன்-என்றார்.

முதற்கட்டமாக சம்மாந் துறை காரைதீவு பிரதேசங்க ளைச் சேர்ந்த 169 விதவைத் தாய்மார்களுக்கு இந் நிவாரணம் முறைப்படி வழங்கப்பட்டது.

(அ)

# காணாமல் ஆக்கப்பட்டோர் பற்றிய விசாரணை தொடர்பான நடமாடும் சேவை திருமலையில்

திருமலை, மே 30

திருகோணமலை மாவட்டம் தம்பலகாமம் பிர தேச செயலக பகுதியில் காணாமல்போன ஆட்கள் பற்றிய விசாரணை தொடர்பான நடமாடும் சேவை நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை தம்பலகாமம் பிரதேச செயலக மண்டபத்தில் இடம் பெற்றது.

குறித்த நடமாடும் சேவையை காணாமல்போன அலுவலகம் முன்னெடுத்திருந்தது.

காணாமல் போனவர்களின் உறவுகள் தங்களது சாட்சியோடு காணாமல்போனோர் ஆணைக்குழு முன்னிலையில் சாட்சியமளித்தனர்.

இதில் கிண்ணியா,கந்தளாய்,தம்பலகாமம் ஆகிய பிரதேச பகுதிகளை உள்ளடக்கியவர்களில் சுமார் 40 க்கும் மேற்போட்டோர்கள் கலந்துகொண்டு



சாட்சியங்களை வழங்கினர்.

இதில் காணாமல்போனோர் அலுவலகத்தின் உயரதிகாரிகள்,தம்பலகாமம் பிரதேச செயலக உதவி பிரதேச செயலாளர் என பலர் கலந்து கொண் டனர்.

(அ)

# நற்பிட்டிமுனையில் இரத்ததானம்



காரைதீவு, மே 30

நற்பிட்டிமுனை இந்து இளை ஞர் மன்றத்தினால் ஏற்பாடு செய் யப்பட்ட இரத்த தான முகாம் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கி ழமை சிவசக்தி மகா வித்யால யத்தில் நடைபெற்றது.

குருதி வழங்குவதில் ஆலயக் குருக்கள்மாரும் ஆர்வம் செலுத் தினர்.

கல்முனை ஆதார வைத்திய சாலையின் உதவியோடு "உதி ரம் கொடுப்போம் உயிர் காப் போம்" என்ற திட்டத்தின் கீழ் இந்த இரத்த தான முகாம் ஏற் பாடு செய்யப்பட்டிருந்தது.

ஞாயிற்றுக்கிழமை காலை 8 மணி முதல் 4:00 மணி வரை இந்த முகாம் இடம்பெற்றது என்றும் 63பேர் உதிரம் வழங்கி னர் என்றும் இந்து இளைஞர் மன்ற பிரமுகர் பியந்த தெரிவித் தார்.

(அ)

# சம்மாந்துறை ஜமாலியா அதிபர் தொடர்பில் ஏட்டிக்குப் போட்டியாக நேற்று ஆர்ப்பாட்டம்!



காரைதீவு, மே 30

சம்மாந்துறை ஜமாலியா வித்தியாலய அதிபர் விவகாரம் தொடர்பில் இரு கோஷ்டிகள் ஏட்டிக்குப் போட்டியாக வல யக்கல்விப் பணிமனையின் முன் னால் ஆர்ப்பாட்டம் நடத்தின.

நேற்று திங்கட்கிழமை காலை 8 மணி முதல் 9 மணி வரை இரு தரப்பினரும் இவ்வாறு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

சம்மாந்துறை பொலிஸார் ஸ்தலத்திற்கு விரைந்து சம்மாந் துறை வலயக்கல்விப் பணிப்பா ளர் உமர் மௌலானா மற்றும் அதிகாரிகளோடு பேசி ஆர்ப் பாட்ட ஸ்தலத்திற்கு வந்து ஆர்ப்பாட்டக்காரர்களோடு கலந்துரையாடப்பட்டது.

அதன் பின்பு இரண்டு கோஷ் டிகள் சார்பிலும் இரண்டு இரண்டு பேரை அழைத்து அலு வலகத்தில் பேச்சுவார்த்தை நடத்தப்பட் டது. இறுதியாக இந்த விடயம் தொடர்பாக கிழக்கு மாகாண கல்வி அமைச் சின் செயலாளருக்கு விடயத்தை தெரிவித்து இதற்கான தீர்வைப் பெற்றுத் தருவதாக பணிப்பா ளர் உமர் மௌலானா உறுதிய ளித்ததை அடுத்து ஆர்ப்பாட் டம் காரர்கள் கலைந்து சென் றார்கள்.

(அ)

# கட்டடம் திறந்து வைப்பு

திருமலை, மே 30

பாலமுனை மஹாஸி னுல் உலூம் இஸ்லாமிய கல்லூரியின் அல்குர்ஆன் மனனப் பிரிவிற்கான கட்டடம் புனரமைக்கப் பட்டு இன்றைய தினம் கல்லூரியின் பணிப்பா ளர் அஷ்ஷெய்க் எ.எல். மௌஜூத் பாகவி, கல் லூரி அதிபர் எ.எல். ஸ ாஜித் ஹூஸைன் பாகவி, பாலமுனை



பெரிய ஜு/ம்ஆ பள்ளிவாயல் தலைவர் அல்ஹாஜ் யு.எல். அப்துல் லத்தீப், கல்லூரி நிர்வாக சபைத் தலைவர் அல்ஹாஜ் எ. ஆதம்பாவா ஏனைய நிர்வாக சபை உறுப்பினர்கள் ஆகியோரால் திறந்து வைக் கப்பட்டது.

(அ)

# ஈரானுக்கு உக்ரைன் பொருளாதார தடை!

## ரஷ்யாவுக்கு ஆயுதங்களை விற்பதால்

கீவ், மே 30

**ஈரானுக்கு எதிராக 50 ஆண்டு பொருளாதார தடை விதிக்கும் சட்டமூலம் உக்ரைன் பாராளுமன்றத்தில் முன் வைக்கப்பட்டுள்ளது.**



உக்ரைன் போரில் ரஷ்யாவுக்கு குறைந்த விலையில் ஆயுதம் விநியோகம் உள்ளிட்ட நடவடிக்கைகளில் ஈரான் ஈடுபட்டு வருகிறது. இதனால் ஈரான் மீது ஏற்கனவே பல்வேறு பொருளாதார தடைகளை உக்ரைன் விதித்துள்ளது.

இந்நிலையில் ஈரானுக்கு எதிராக உக்ரைன் பாராளுமன்றத்தில் அதிபர் விளாடிமிர் ஜெலன்ஸ்கி புதிய சட்டமூலத்தைத் தாக்கல் செய்து உரையாற்றினார்.

குறித்த சட்டமூலம்அடுத்த 50 ஆண்டுகளுக்கு ஈரான் மீது விரிவான துறைசார் பொருளாதார தடைகளை விதிக்க வழி வகை செய்கிறது என அவர் கூறினார்.

மேலும் உக்ரைன் வழியாக அதன் வளங்களை கடத்துதல், தொழில்நுட்பம் மற்றும் அறிவு சார் சொத்துரிமைகளை மாற்றுவதற்கு தடை விதிக்க இந்த சட்டமூலம் வழிவகை செய்வதாகவும் அவர் தெரிவித்தார்.

இதற்கு முன்பு கடந்த மார்ச் மாதம் ரஷ்யா மற்றும் ஈரானில் உள்ள 141 சட்ட நிறுவனங்களுக்கு 10 ஆண்டுகளுக்கு உக்ரைன் தடை விதித்தது குறிப்பிடத்தக்கது. (அ)

# தரையிறங்கும் போது திடீரென வெடித்த விமானச் சக்கரங்கள்!

## நூலிழையில் உயிர் தப்பிய பயணிகள்




ஜெட்டா, மே 30

தரையிறங்கும்போது விமானத்தின் சக்கரங்கள் வெடித்த சம்பவம் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

சவூதி அரேபியாவை நோக்கிச் சென்றுக் கொண்டிருந்த எகிப்து எயார் விமானத்தின் சக்கரங்களே இவ்வாறு வெடித்துள்ளன.

ஆயினும் பெரும் விபத்து தவிர்க்கப்பட்டு விமானத்தில் இருந்த பயணிகள் உயிர்தப்பியுள்ளனர்.

கெய்ரோவில் இருந்து புறப்பட்ட அந்த விமானம் சவூதியின் கடற்கரை நகரான ஜெட்டாவில் உள்ள கிங் அப்துல் அசீஸ் சர்வதேச விமான நிலையத்தில் பலத்த பாதுகாப்புடன் தரையிறங்கியது என்பதும் குறிப்பிடத்தக்கது. (அ)

# கனடாவில் வகுப்பு கட்டணத்தை ரத்து செய்யும் பல்கலைக்கழகம்?

ஒன்றாரியோ, மே 30

கனேடிய பல்கலைக்கழகமான ஒன்றாரியோவின் வாட்டர்லூ பல்கலைக்கழகம் மாணவர்களின் வகுப்பு கட்டணத்தை ரத்து செய்வதாக அறிவித்துள்ளது.

இந்நிலையில் பழங்குடியின சமூகத்தைச் சேர்ந்த மாணவர்களின் வகுப்புக் கட்டணங்கள் ரத்து செய்யப்படுவதாக தெரிவிக்கப்படுகின்றது.

பல்கலைக்கழகம் அமைந்துள்ள பகுதியில் காணப்படும் இரண்டு பூர்வகுடியின மக்கள் சமூகத்தைப் பிரதிநிதித்துவம் செய்யும் மாணவர் சமூகத்திற்கு இந்த சலுகை வழங்கப்படுகின்றது.

மிஸ்ஸிசாகாவின் பழங்குடியின மக்கள் மற்றும் பழங்குடியின பகுதியின் சிக்ஸ் நேஷன் பழங்குடியின மக்கள் சமூகத்தைச் சேர்ந்த மாணவர்களுக்கு இவ்வாறு சட்டண வசதி அறிவிக்கப்பட்டுள்ளது.

முழு நேர அடிப்படையில் பல்கலைக்கழகத்தில் பட்டமொன்றை தொடரக்கூடிய தகுதியுடைய மாணவர்களுக்கு இந்த சலுகை வழங்கப்பட உள்ளது.

மாணவர்களுக்கு வகுப்பு கட்டணங்கள் ரத்து செய்யப்பட்ட முதல் சந்தர்ப்பம் இது வென்பது குறிப்பிடத்தக்கது.

# துருக்கியில் ஜனாதிபதித் தேர்தலில் மீள ஆட்சியைப் பிடித்த எர்டோகன்!

அங்காரா, மே 30

துருக்கியில் கடந்த மே 15 ஆம் திகதி ஜனாதிபதித் தேர்தல் நடைபெற்றது. இந்த தேர்தலில் வேட்பாளரான எர்டோகன் 49.50 சதவீதம் வாக்குகளையும், கூட்டணி கட்சி வேட்பாளர் கெமால் கிளிக்டரோக்லு 44.79 சதவீத வாக்குகளையும் பெற்று இருந்தனர்.

இரு தரப்பினருக்கும் பெரும்பான்மை இல்லாததால், 2ஆம் கட்ட தேர்தல் நேற்று நடைபெற்றுள்ளது. இந்த தேர்தலில் பொதுமக்கள் ஆர்வத்தோடு வாக்களித்தனர்.

குறிப்பாக நீண்டகாலமாக துருக்கியை ஆட்சி செய்யும் எர்டோகன், மீண்டும் ஆட்சியை கைப்பற்றுவாரா? ஆட்சி மாறும் நடைபெறுமா? என்ற எதிர்ப்பார்ப்புடன் இருந்தனர்.

இந்நிலையில் துருக்கி ஜனாதிபதி தேர்தலில் தாயீப் எர்டோகன் வெற்றி பெற்றதாக தகவல் வெளியாகி உள்ளது.



ஏறக்குறைய அனைத்து வாக்குகளும் எண்ணப்பட்ட நிலையில், எர்டோகன் 52.2 சதவீத வாக்குகளை பெற்று வெற்றி பெற்றுள்ளார். அவருக்கு எதிராக போட்டியிட்ட கெமல் கிலிக்ட்ரோக்லு 47.8 சதவீத ஓட்டுகள் பெற்று, இரண்டாம் இடத்தில் இருக்கிறார்.

தனது 20 ஆண்டு கால ஆட்சியை மேலும் ஐந்தாண்டுகளுக்கு நீட்டித்துள்ள எர்டோகனின் இந்த வெற்றி வரலாற்றில்

மேலும் துருக்கியிலிருந்த பிரதமர் பதவியை மாற்றி அமைத்து ஜனாதிபதி பதவியே, உச்சபட்ச பதவியென மாற்றி அதற்கு தேர்தல் நடத்தப்பட்டு வருவது குறிப்பிடத்தக்கது.

இவரது வெற்றிக்கு ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புதின், ஜெலென்ஸ்கி, பிரித்தானிய பிரதமர் ரிஷி சுனக் ஆகியோர் வாழ்த்து தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ)

# ரஷ்ய எல்லை பாதுகாப்பை பலப்படுத்த புடின் உத்தரவு!

மொஸ்கோ, மே 30


உக்ரைன் மீது ரஷிய படைகள் போர் தாக்குதல் நடத்தி வருகிறது. இப்போர் ஒரு ஆண்டுக்கும் மேலாக நீடித்துக் கொண்டிருக்கின்றது. இதில் சில நகரங்களை ரஷ்யா கைப்பற்றியது.

உக்ரைனுக்கு ஆதரவாக அமெரிக்கா, மேற்கத்திய நாடுகள் ஆயுத உதவிகளை செய்து வருகின்றன. இதனால் ரஷ்ய படைகளுக்கு எதிராக உக்ரைன் ராணுவம் சண்டையிட்டு வருகிறது.

ரஷ்யா வீசும் ஏவுகணை மற்றும் ட்ரோன்களை உக்ரைன் சுட்டு வீழ்த்தி வருகிறது. மேலும் ரஷ்ய எல்லை பகுதியில் உள்ள கிராமங்களில் தாக்குதல் நடத்தப்பட்டன.

நேற்று முன் தினம் மொஸ்கோவுக்கு வடமேற்கே உள்ள எண்ணெய் குழாய் வெடித்து சிதறியது. இந்த நிலையில் ரஷ்ய கட்டுப்பாட்டில் உள்ள உக்ரைனிய பகுதிக்குள் ரஷிய ராணுவம் மற்றும் பொதுமக்கள் நடமாட்டத்தை உறுதி செய்ய எல்லை பாதுகாப்பை பலப்படுத்துமாறு ரஷ்ய அதிபர் புடின் உத்தரவிட்டுள்ளார்.

ரஷ்யாவின் எல்லை காவலர் தின வாழ்த்து செய்தியில் புடின் கூறும் போது- ரஷ்ய கூட்டமைப்பின் புதிய குடிமக்களுக்கு அனுப்பப்படும் உணவு, மனிதாபமான உதவி, கட்டுமானப் பொருட்கள் உள்பட ராணுவ மற்றும் பொது மக்கள் வாகனங்கள் மற்றும் சரக்குகளின் விரைவான இயக்கத்தை



உறுதி செய்வது அவசியம்.

அந்த எல்லைகளில் பாதுகாப்பை பலப்படுத்த வேண்டும் -என்றார். உக்ரைனின் கெர்சன், ஜபோரிஜியா, லுஹான்ஸ்க், டொனெட்ஸ்க் ஆகிய நான்கு பகுதிகளை ரஷியாவுடன் இணைப்பதாக கடந்த செப்ரெம்பர் மாதம் புடின் அறிவித்தார்.

இதற்கிடையே உக்ரைனில் ரஷ்யா ஆக்கிரமித்துள்ள பகுதிகளில் எதிர்த்தாக்குதல் நடத்த தயார் என்று உக்ரைன் அறிவித்தது. இந்த நிலையில்தான் எல்லைகளில் பாதுகாப்பை பலப்படுத்துமாறு ரஷ்ய அதிபர் புடின் ராணுவத்துக்கு உத்தரவிட்டுள்ளார். (அ)

# சீனாவின் புதிய கண்டுபிடிப்பாக ஓட்டுநர் இல்லாத கார் அறிமுகம்!

பீஜிங், மே 30



சீனாவின் புதிய கண்டுபிடிப்பாக ஓட்டுநர் இல்லாத கார் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

சர்வதேச பிக் டேட்டா இண்டஸ்ட்ரி எக்ஸ்போ வில் தென் மேற்கு குய்சோ மாகாணத்தில் உள்ள குய்யாங் நகரில் நடைபெற்று வரும் அறிமுகப்படுத்தப்பட்டுள்ள இந்த புதிய வகை கார்கள் பார்வை யாளர்களின் கவனத்தை அதிகளவில் ஈர்த்து வருவதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

விசாலமான கேபின் உள்ள இந்த கார், ஸ்டீயரிங் மற்றும் ஓட்டுநர் இருக்கை இல்லாமல் வடிவமைக்கப்பட்டுள்ளது.

காரில் 4 லேசர் ராடர்கள், 7 கமெராக்கள் மற்றும் 12 மில்லிமீற்றர் - அலை ரேடார்கள் பொருத்தப்பட்டுள்ளன.

3 நாட்கள் நடைபெறும் கண்காட்சியில் சிறிய ரோந்து கார்கள் தவிர, 3 டி பிரிண்டர் மற்றும் செயற்கை நுண்ணறிவு பொருட்களும் காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (அ)

ஈழநாடு






# ஜெய்ஸ்வாலே சிறந்த வீரர் டி வில்லியர்ஸ் தெரிவிப்பு

அகமதாபாத், மே 30

இந்த ஐ. பி. எல். தொடரில் சிறந்த வீரர் ஜெய்ஸ் வால் தான் என்று தென்னாபிரிக்காவின் முன்னாள் அதிரடி வீரர் ஏபி டி வில்லியர்ஸ் கூறியுள்ளார்.

16ஆவது ஐ. பி. எல். போட்டி நேற்றுடன் நிறை வுக்கு வந்தது. இந்தத் தொடரில் அதிக ஓட்டங்கள் குவித்த வீரராக ஷூப்மன் கில் திகழ்ந்தார். அவர் 17 இன்னிங்ஸில் 3 சதங்களுடன் 890 ஓட்டங்களை குவித்திருந்தார்.

அவருக்கு அடுத்தப்படியாக பெங்களூர் அணியின் தலைவர் டு பிளெசிஸ் 730 ஓட்டங்களுடனும், விராட் கோலி 639 ஓட்டங்களுடனும் உள்ளனர். இந்நிலையில் இந்த ஐ. பி. எல். தொடரில் சிறந்த வீரர் யஷஸ்வி ஜெய்ஸ்வால்தான் என தென்னாபிரிக்காவை சேர்ந்த அதிரடி ஆட்டக்காரர் டி வில்லியர்ஸ் கூறியுள்ளார்.

இது தொடர்பாக அவர் கூறும்போது,

என்னை பொறுத்தவரை இந்தத் தொடரில் சிறந்த வீரர் ஜெய்ஸ்வால்தான். அவர் ஓர் இளம் வீரர் மற்றும் அனைத்து விதமான ஷொட்களையும் அடிக்கிறார். அவர் மைதானத்தில் மிகவும் பொறுமையாகவும், அமைதியாகவும் இருக்கிறார். அவர் செய்வதை நான் ரசிக்கிறேன். பந்துவீச்சாளர்கள்மீது ஆதிக்கம் செலுத்து கிறார். ஜெய்ஸ்வால் இன்னும் நீண்ட தூரம் செல்ல வேண்டும் என நான் நினைக்கிறேன். மேலும் அவரிடம் சிறந்த வீரராக உருவாவதற்கான அனைத்து தகுதிகளும் உள்ளன - என்றார்.

# இங்கிலாந்துடனான ஒப்பந்தத்தை முடிவுக்கு கொண்டுவந்தார் றோய்




லண்டன், மே 30

பணம் கொழிக்கும் தொழில்முறை கிரிக்கெட் போட்டிகளில் பங்குபற்றும் நோக்கத்துடன் இங்கிலாந் தின் ஜசன் றோய் தனது தேசிய அணிக்கான கிரிக்கெட் ஒப்பந்தத்தை முடிவுறுத்தினார்.

தொழில்முறை கிரிக்கெட் விளையாடுவதற்காக தேசிய ஒப்பந்தத்தைத்தை முடிவுறுத்திய முதலாவது இங்கிலாந்து வீரர் ஜசன் றோய் ஆவார்.

அமெரிக்க மேஜர் லீக் கிரிக்கெட் போட்டியில் ஒரு பருவகாலத்திற்கு ஒன்றரை இலட்சம் பவுண்ஸ்கள் சம்பாதிக்கும் நோக்கத்தில் 60,000 - 70,000 பவுண்ஸ் ஒப்பந்தத்தைக் கைவிட ஆரம்ப அதிரடி வீரர் ஜசன் தீர்மானித்துள்ளதாக பி. பி. சி. செய்தி வெளியிட்டுள்ளது.

எவ்வாறாயினும் தேசிய அணி தேர்வுக்கு 32 வயதான ஜசன் றோய் தயாராகவே இருக்கிறார்.

"மிகத் தெளிவாகக் கூறுவதென்றால், நான் இங்கி லாந்து அணிக்கே முன்னுரிமை அளிப்பேன். உலகக் கிண்ணம் நெருங்கி வருகின்ற இவ்வேளையில் இங்கி லாந்துக்கு விளையாடுவதை விரும்புகிறேன்" என ஜசன் றோய் தெரிவித்தார். (ஐ)

# பிரெஞ்சு ஓப்பன் ரென்னிஸ் சபலென்கா, சிட்சிபாஸ் வெற்றி!

பாரிஸ், மே 30

பிரெஞ்சு ஓப்பன் ரென்னிஸில் பெலாரஸ் வீராங் கனை சபலென்கா, கிரீஸ் வீரர் சிட்சிபாஸ் முதல் சுற்றில் வெற்றி பெற்றனர்.

"கிராண்ட்ஸ்லாம்" என்ற உயரிய அந்தஸ்து பெற்ற பிரெஞ்சு ஓப்பன் ரென்னிஸ் போட்டி பாரீஸ் நகரில் நேற்றுமுன்தினம் தொடங்கியது. களிமண் தரை போட்டியான இதில் முதல் நாளில் முதல் சுற்று ஆட்டங் கள் நடந்தன.

ஆண்கள் ஒற்றையர் பிரிவின் தொடக்க ஆட்டத்தில் தரவரிசை யில் 14ஆவது இடம் வகிக்கும் ஹூபர்ட் ஹர்காக்ஸ் (போலந்து) முதல் தடையை கடக்கவே பெரும் போராட்டம் நடத்த வேண்டி இருந்தது. அவர் தன்னை எதிர்த்த பெல்ஜியத்தின் டேவிட் கோபினை 6-3, 5-7, 6-4, 2-6, 6-4 என்ற செற் கணக்கில் 3 மணி 37 நிமிடங்களில் சாய்த்தார்.

இதே போல் 5ஆம் நிலை வீர ரான சிட்சிபாஸ் (கிரீஸ்) 7-5, 6-3, 4-6, 7-6 (9-7) என்ற செற் கணக்கில் ஜிரி வெஸ்லியை (செக்குடியரசு) தோற்கடித்தார். இந்த வெற்றியை பெற சிட்சிபாசுக்கு 3 மணி 13 நிமி டங்கள் தேவைப்பட்டன.

கரென் கச்சனோவ் (ரஷ்யா), கோகினாகிஸ் (அவுஸ்தி ரேலியா), ரடு அல்போட் (மோல்டோவா), செபஸ்ரியன் அப்னெர் (ஆஸ்தி ரியா) வென்று அடுத்த சுற்றுக்கு முன்னேறினர்.

பெண்கள் ஒற்றையர் பிரிவில் 2ஆம் நிலை வீராங் கனையும், அவுஸ்திரேலிய ஓப்பன் சம்பியனு மான அரினா சபலென்கா (பெலா ரஸ்) 6-3, 6-2 என்ற நேர் செற்றில் மார்டா கோஸ்ட்யுக்கை (உக்ரைன்) எளிதில் வீழ்த்தி 2ஆவது சுற்றுக்கு முன்னேறினார்.

உக்ரைன் மீதான ரஷ்யாவின் போருக்கு பெலாரஸ் ஆதரவாக இருப்பதால் அதை மனதில் வைத்து உக்ரைன் வீராங்கனை கோஸ்ட்யுக், ஆட்டம் முடிந்ததும் சபலென்காவு டன் கைகுலுக்குவதை தவிர்த்து அதிருப்தி யுடன் நடையை கட்டினார்.

சபலென்கா அடுத்து சக நாட்டவரான தகுதி நிலை வீராங்கனை ஷியாமனோவிச்சை சந்திக்கிறார்.

மற்ற ஆட்டங்களில் நடியா போடோராஸ்கா (அர்ஜென்டினா) 6-0, 6-2 என்ற நேர் செற்றில் ஜெசிகா போன்செட்டையும் (பிரான்ஸ்), மேக்டலினா பிரெச்



(போலந்து) 6-1, 6-1 என்ற நேர் செற்றில் சூவாய் ஜோங் கையும் (சீனா), பெல்ஜியத்தின் எலிஸ் மெர்டென்ஸ் 6-1, 6-4 என்ற செற் றில் விக்டோரியா ஹிரன்காகோவா வையும் (சுலோவக்கியா) வென்ற னர். (ஐ)

# ஐ. பி. எல்லிலிருந்து ஓய்வு பெற்றார் ராயுடு

சென்னை, மே 30

ஐ. பி. எல். தொடரில் விளையாடிய சென்னை சுப்பர் கிங்ஸ் அணி வீரர் அம்பதி ராயுடு இந்த தொடர்தான் தனது கடைசி தொடர் என ருவிட்டரில் பதிவிட்டுள் ளார்.

இதுதொடர்பாக ராயுடு நேற்று முன்தினம் வெளி யிட்ட ருவிற்றர் செய்தியில்,

"இதுதான் எனது கடைசி ஐ. பி. எல். தொடர். மும்பை மற்றும் சென்னை என்று 2 சிறந்த அணிகள், 204 போட்டிகள், 14 தொடர்கள், 11 பிளே ஓவ் சுற்றுகள், 8 இறுதிப் போட்டிகள், 5 கிண்ணங்கள். இது ஒரு நல்ல பயணம். இன்று இரவு நடக்கும் இறுதிப் போட்டி ஐ. பி. எல்லில் எனது கடைசி ஆட்டமாக இருக்கும் என்று நான் முடிவு செய்துள்ளேன்.

நான் உண்மையிலேயே இந்த சிறந்த போட்டியை விளையாடி மகிழ்ந்தேன். அனைவருக்கும் நன்றி என பதிவிட்டுள்ளார்.

அம்பதி ராயுடு 2010 முதல் 2017 வரை மும்பை இந்தியன்ஸ் அணிக்காகவும், 2018க்கு பிறகு சென்னை சுப்பர் கிங்ஸ் அணிக்காகவும் விளையாடி வருகிறார். அவர் இதுவரை 203 ஐ. பி. எல். போட்டிகளில் விளையாடி 4,329 ஓட்டங்கள் எடுத்துள்ளார். அவரின் சராசரி 28.29 ஆக உள்ளது அவருடைய அதிகபட்ச ஓட்டமாக ஆட்டமிழக்காமல் 100 ஓட்டங்கள் உள்ளது.






# போர்முலா - 1 கார் பந்தயம் வெர்ஸ்டப்பென் முதலிடம்!

மொனாக்கோ, மே 3

மொனாக்கோவில் நடந்த போர்முலா வன் கார் பந்தயத்தில் நெதர்லாந்து வீரர் வெர்ஸ்டப்பென் முதலிடம் பிடித்துள்ளார்.

கார் பந்தயங்களில் பிரபலமான போர்முலா வன் கார் பந்தயம் உலகம் முழுவதும் 22 சுற்றுகளாக நடத்தப்படுகிறது. இதன் 6ஆவது சுற்றான மொனாக்கோ கிராண்ட்பிரி நேற்றுமுன்தினம் நடந்தது. 260.286 கிலோமீற்றர் பந்தய தூரத்தை நோக்கி வழக்கம் போல் 10 அணிகளைச் சேர்ந்த 20 வீரர்கள் சீறிப்பாய்ந்தனர்.

இதில் தகுதி சுற்றில் முதலிடம் பிடித்த நடப்பு சம்பியனும், நெதர்லாந்து வீரருமான மக்ஸ் வெர்ஸ்டப்பென் (ரெட்புல் அணி) முதல் வரிசையில் இருந்து காரை செலுத்தினார். அதிவேகத்தில் காரை ஓட்டிய அவர் மழை பாதிப்புக்கு மத்தியிலும் சிறப்பாக செயல்பட்டு வாகை சூடினார். ஒரு மணி 48 நிமிடம் 51.980 விநாடிகளில் பந்தய தூரத்தை கடந்து 25 புள்ளிகளை தனதாக்கினார்.

இந்தத் தொடரில் வெர்ஸ்டப்பென் முதலிடத்தை பிடிப்பது இது 4ஆவது முறையாகும். அவரை விட 27.921 விநாடி பின்தங்கிய முன்னாள் சம்பியன் பெர்னாண்டோ அலோன்சா (ஸ்பெயின்) 2ஆவதாக வந்து 18 புள்ளிகளை பெற்றார். பிரான்ஸின் எஸ்ட்பான் ஓகான் 3ஆவது இடத்தை பெற்றார்.

7 முறை சம்பியனான இங்கிலாந்து வீரர் லீவிஸ் ஹமில்டன் 4ஆவது இடத்திற்கு தள்ளப்பட்டார். அவருக்கு 13 புள்ளி கிடைத்தது.

இதுவரை நடந்துள்ள 6 சுற்று முடிவில் ஒட்டுமொத்த சம்பியன்ஷிப் பட்டத்துக்கான வாய்ப்பில் வெர்ஸ்டப்பென் 144 புள்ளிகளுடன் முதலிடத்தில் நீடிக்கிறார். மெக்சிகோவின் செர்ஜியோ பெரேஸ் (105 புள்ளி) 2ஆவது இடத்தில் உள்ளார்.

# பௌத்த மதத்தை அவமதித்தால் கடும் நடவடிக்கை அவசியமானது

## சரத் வீரசேகர வலியுறுத்து

கொழும்பு, மே 30

**பௌத்த மதத்தை அவமதிப்பவர்களுக்கு எதிராக உரிய சட்ட நடவடிக்கை எடுக்கப்பட விட்டால், பௌத்தர்கள் சட்டத்தைக் கையில் எடுக்க நேரிடும் என பொதுஜன பெரமுனவின் பாராளுமன்ற உறுப்பினரும், முன்னாள் பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சருமான சரத் வீரசேகர எச்சரிக்கை விடுத்துள்ளார்.**




அவர் மேலும் தெரிவிக்கையில்-

பௌத்த மதத்தை அவமதிப்பதும், பின்னர் மன்னிப்புக்கோருவதும் நாட்டில் வழமையான செயற்பாடொன்றாக மாறியுள்ளது.

பௌத்தத்தை அவமதிப்பவர்களுக்கு எதிராக கடுமையாக தண்டனை வழங்கப்பட வேண்டும்.

இவர்களுக்கு வெளிநாடுகளில் இருந்து பாரியளவில் பணங்கள் கிடைக்கின்றன. அதுபோல வெளிநாடுகளுக்கு சுற்றுலா செல்வதற்கும் டிக்கட்டுக்கள் வழங்கப்படுகின்றன.

இவர்களுக்கு தண்டனை வழங்கவில்லை என்றால் பௌத்தர்கள் இவர்களை தண்டிப்பார்கள். பௌத்தர்களின் பொறுமையை சோதிக்க வேண்டாம்.

பணத்துக்காக பௌத்தத்தை அவமதிப்பவர்கள் தங்களது பெற்றோர்களைக் காட்டிக்கொடுக்கவும் தயங்க மாட்டார்கள்- என்றார். (அ)

# சத்தா ரத்ன தேரர் கைது!

கொழும்பு, மே 30

அரசியல் பிரமுகர்களைக் கடுமையாக விமர்சிக்கும்-சமூகவலைத்தளங்களில் பிரபலமான சர்ச்சைக்குரிய ராஜாங்கனை சத்தா ரத்ன தேரர் கைது செய்யப்பட்டார்.

மத நல்லிணக்கத்துக்கு முரணான வகையில் கருத்து வெளியிட்ட குற்றச்சாட்டின் அடிப்படையிலேயே அவர், அநுராதபுரம் பகுதியில் வைத்து அவர் நேற்று முன்தினம் இரவு, சி.ஐ.டியினரால் கைது செய்யப்பட்டார்.

பௌத்த மதத்தை அவமதிக்கும் வகையில் கருத்து வெளியிட்டதால் கைது செய்யப்பட்ட நடாசா எதிரிசூரியவையும், தகாத வார்த்தைகளால் திட்டி, குறித்த தேரர் காணொளி பதிவிட்டிருந்தார் என்பதும் குறிப்பிடத்தக்கது. (அ)

# ஜனாதிபதி தேர்தலில் சஜித்துக்கு ஆதரவா?

## முடிவில்லை என்கிறது முற்போக்கு கூட்டணி

கொழும்பு, மே 30

ஜனாதிபதித் தேர்தலில் யாரை ஆதரிப்பது என்பது தொடர்பில் தமிழ் முற்போக்குக் கூட்டணி இன்னும் எந்தவொரு முடிவையும்எடுக்கவில்லை என்று கூட்டணி உறுப்பினர் ஒருவர் தெரிவித்தார்.

அடுத்த ஜனாதிபதி தேர்தலில் ஐக்கிய மக்கள் சக்தி மற்றும் ஐக்கிய மக்கள் கூட்டணியின் சார்பில் ஜனாதிபதி வேட்பாளராக சஜித் பிரேமதாசவை களமிறக்குவதற்கு ஐக்கிய மக்கள் சக்தியின் செயற்குழு அண்மையில் தீர்மானித்திருந்தது.

ஐக்கிய மக்கள் கூட்டணியில் தமிழ் முற்போக்குக் கூட்டணியும் பங்காளியாக உள்ளது.

இந்நிலையில் மேற்படி முடிவுடன் தமிழ் முற்போக்கு கூட்டணி உடன்படுகின்றதா என எழுப்பட்ட கேள்விக்கு பதிலளிக்கையிலேயே, ஜனாதிபதித் தேர்தல் தொடர்பில் தமிழ் முற்போக்குக் கூட்டணி இன்னும் முடிவெடுக்கவில்லை எனவும், தேர்தல் அறிவிக்கப்பட்ட பின்னரே அது தொடர்பில் அறிவிப்பு விடுக்கப்படும் எனவும் கூட்டணி உறுப்பினர் குறிப்பிட்டார். (அ)

# உர வகைகள் மட்டுப்படுத்தப்படவில்லை தேவையானதை விவசாயிகள் பெறலாம்

கொழும்பு, மே 30

நெற்செய்கைக்கான உரங்களை கொள்வனவு செய்வதற்காக வழங்கப்படும் வவுச்சரில் எந்தவொரு உர வகைகளையும் வெவ்வேறாக மட்டப்படுத்தப்படவில்லை என விவசாய அமைச்சின் செயலாளர் குணதாச சமரசிங்க வலியுறுத்தியுள்ளார்.

குறிப்பிட்ட சில வகையான உரங்கள் கட்டாயமாக்கப்பட்டுள்ளதாக விவசாயிகள் தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பில் அமைச்சர் மேலும் தெரிவிக்கையில்- அண்மைய நாட்களில் 30 வீத சேதன உரங்களும் 70 வீத இரசாயன உரங்களும் கட்டாயமாக்கப்பட்டுள்ளதாக இரண்டு மாவட்டங்களில் உள்ள சிறு விவசாயிகள் குழு ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்துள்ளது. ஆனால் அது உண்மையல்ல.

இரசாயன உரங்கள் அல்லது சேதன உரங்களை விவசாயிகளின் விருப்பத்திற்கேற்ப கொள்வனவு செய்ய முடியும்-என்றார். (அ)

# பிராந்திய வானொலி நிலையங்கள் மூடும் தீர்மானம் பிற்போடப்பட்டது

கொழும்பு, மே 30

இலங்கை ஒலிபரப்பு கூட்டுத்தாபனத்தின் கீழ் இயங்கிவரும் பிராந்திய வானொலி நிலையங்களை இம்மாத இறுதியுடன் மூடுவதற்கு அரசாங்கம் தீர்மானம் ஒன்றை எடுத்திருந்த நிலையில், குறித்த தீர்மானம் காலவரையின்றி பிற்போடப்பட்டுள்ளது.

பிராந்திய வானொலி நிலையங்கள் பல , சமூக ,கலை கலாசார விடயங்களுடன் தொடர்புபட்டுள்ளதாலும், அவை வருமானத்தை ஈட்டித்தரும் நிலையங்களாக இருப்பதாலும் உடனடியாக மூடாமல், அவற்றை மறுசீரமைக்கும் செயற்பாடுகளை ஆராயுமாறு ஜனாதிபதி ரணில் பணிப்புரை விடுத்துள்ளதாக தெரியவருகிறது.

கிழக்கு மாகாணத்தில் பிறை எப்.எம்., வடக்கின் யாழ் எப்.எம் உட்பட்ட பல பிராந்திய வானொலி நிலையங்கள் இம்மாத இறுதியுடன் சேவைகளை நிறுத்தவிருந்தமை குறிப்பிடத்தக்கது. (அ)

# உயிரிழந்த தன் பிள்ளையை கட்டாயமாக கொண்டு சென்ற தந்தையினால் பரபரப்பு

கொழும்பு, மே 30

நுவரெலியா வைத்தியசாலையில் இருந்து வலுக்கட்டாயமாக தனது இறந்து போன பிள்ளையை கொண்டு சென்ற தந்தை தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர்.

குறித்த தந்தை நுவரெலியா நகருக்கு விஜயம் மேற்கொண்டிருந்தபோது, தனது பிள்ளை திடீரென சுயநினைவை இழந்ததாக நுவரெலியா மாவட்ட ஆதார வைத்தியசாலைக்கு பிள்ளையை அழைத்து சென்றார்.

குழந்தையை பரிசோதித்த மருத்துவர்கள் குறித்த 14 வயது பிள்ளை ஏற்கனவே இறந்துவிட்டதாக தந்தைக்குத் தெரிவித்தனர்.

அப்போது அதைத் தாங்கிக் கொள்ள முடியாத தந்தை கோபத்தில் பிள்ளையை அழைத்துச் சென்றுள்ளார்.

குறித்த தந்தை, "தனியார் மருத்துவமனைக்குச் சென்று பிள்ளையை காப்பாற்றுகிறேன்" என்று கூறி பிள்ளையை பஸ்ஸில் ஏற்றிச் சென்றதாகவும் வைத்தியசாலை ஊழியர்கள் குறிப்பிட்டனர்.

இந்த சம்பவம் தொடர்பில் வைத்தியர்கள் செய்த முறைப்பாட்டின் அடிப்படையில் நுவரெலியா பொலிஸார் தற்போது விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

குழந்தையை அழைத்துச் சென்ற பஸ்ஸின் சிசிரிவி கமெராக்களை ஆய்வு செய்து மேலதிக விசாரணைகளை மேற்கொள்வதாக பொலிஸார் தெரிவித்தனர். (அ)

# போதகர் ஜெரோம் தொடர்பான சம்பவத்தின் பின்னால் சி.ஐ.ஏ!

## வசந்த சமரசிங்க சந்தேகம்

கொழும்பு, மே 30

கிறிஸ்தவ போதகர் ஜெரோம் பெர்னாண்டோ தொடர்பான சம்பவம் ரணில்-ராஜபக்ச மற்றும் அமெரிக்காவின் சி.ஐ.ஏ ஆகிய தரப்பின் வேலையோ என்ற சந்தேகம் இருப்பதாக மக்கள் விடுதலை முன்னணியின் அரசியல் சபை உறுப்பினரும் ஊழல் எதிர்ப்பு குரல் அமைப்பின் ஒருங்கிணைப்பாளருமான வசந்த சமரசிங்க தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்- பல்வேறு காலகட்டங்களில் மத மற்றும் நல்லிணக்கத்தை பாதிக்கும் வகையில் பல நபர்கள் மக்களை தூண்டும் கருத்துக்களை வெளியிடுகின்றனர்.

அதில் பெரும்பாலும் அரசியல் மாத்திரமல்லாது சர்வதேச அமைப்புகளின் தலையீடுகளும் இருக்கின்றன.

இதனடிப்படையில் இவ்விதமாக அண்மையில் போதகர் ஜெரோம் பெர்னாண்டோ வெளியிட்ட கருத்து சி.ஐ.ஏ உளவுச் சேவை மற்றும் இலங்கையின் உயர்மட்ட அரசியல் தளத்திற்கு தேவையான கருத்தோ என்ற சந்தேகம் ஏற்பட்டுள்ளது.

இப்படியான மக்களை தூண்டும் மத மற்றும் இனங்களை அடிப்படையாகக் கொண்டு வெளியிடும் கருத்துக்கள் தொடர்



பில் நாட்டின் மதத் தலைவர்கள் தலையீடுகளை மேற்கொள்ள வேண்டும்.

அத்துடன் அவற்றை கட்டுப்படுத்த தேவையான சட்டத்திட்டங்கள் உடனடியாக கொண்டு வரப்பட வேண்டும்.

தேசிய மக்கள் சக்தியின் அரசியலை மூடிமறைத்து தேர்தலை நடத்தாமல் இருப்பது மாத்திரமல்லாமல் இன, மத பேதங்களை தூண்டி நாட்டை ஜனநாயக விரோத இடத்திற்கு கொண்டு செல்ல ரணில்-ராஜபக்ஷ குழுவினர் முயற்சித்து வருகின்றனர்- என்றார். (அ)

# வடமேல் மாகாணத்திலிருந்து வெளியே கால்நடைகள் கொண்டு செல்லத் தடை!

கொழும்பு, மே 30

வடமேல் மாகாணத்திலிருந்து வெளி மாகாணங்களுக்கு கால்நடைகளைக் கொண்டு செல்வது நிறுத்தப்பட்டுள்ளதாக கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதாரத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

வடக்கு, கிழக்கு மாகாணங்களில் கால்நடைகளில் பரவிய தோல் கழலை நோய் குருநாகல் மாவட்டத்திலும் மாடுகளிடையே பரவ ஆரம்பித்துள்ளது. 100 இற்கும் அதிகமான கால்நடைகள் பாதிக்கப்பட்டுள்ளது என வடமேற்கு மாகாண பதில் பணிப்பாளர் பி.சி.எஸ். பெரேரா தெரிவித்தார்.

இந்நிலையில் வடமேல் மாகாணத்தில் இருந்து வெளி மாகாணங்களுக்கு கால்நடைகளை கொண்டு செல்வது நிறுத்தப்பட்டுள்ளது என அவர் கூறினார்.

குருநாகல் மாவட்டத்தின் சில பகுதிகளில் கால்நடைகள் இடையே தோல் கழலை நோய் பரவி வருகின்ற காரணத்தினால் இந்த தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதாக வடமேற்கு மாகாண பதில் பணிப்பாளர் பி.சி.எஸ். பெரேரா குறிப்பிட்டார். (அ)

# இந்தியா நட்டஈடு கோருவதாக நான் ஒருபோதும் கூறவில்லை

## நீதி அமைச்சர் விஜயதாஸ



கொழும்பு, மே 30

இந்திய அரசாங்கம் நட்டஈட்டு தொகை ஒன்றை கோரியதாக நான் எந்த சந்தர்ப்பத்திலும் தெரிவித்ததில்லை. ஆனால், நியூ டயமண்ட், எக்ஸ்பிரஸ் பேர்ள் கப்பல் ஆகிய இரண்டு கப்பல்களின் பாதிப்பை கட்டுப்படுத்துவதற்காக இந்திய கடற்படைக்கு ஏற்பட்ட செலவை மீள வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்குமாறே இந்திய உயர் ஸ்தானிகர் கோரி இருந்தார் என நீதி அமைச்சர் விஜயதாச ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

இந்திய கடற்படையை நியூ டயமண்ட் கப்பலில் ஏற்பட்ட தீயை அணைப்பதற்கு ஈடுபடுத்தியதன் மூலம் ஏற்பட்ட செலவு 400 மில்லியன் இந்திய ரூபாய் மற்றும் எக்ஸ்பிரஸ் பேர்ள் கப்பலில் ஏற்பட்ட தீயை அணைப்பதற்கு இந்திய கடற்படைக்கு ஏற்பட்ட செலவு 490 மில்லியன் இந்திய ரூபாயையும் அவர்களுக்கு செலுத்துவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு அவர்கள் எமக்கு அறிவித்திருக்கிறார்கள்.

அந்த இரண்டு கப்பல்கள் தொடர்பான வழக்குகள் மூலம் அந்தப் பணத்தை பெற்றுக்கொண்டு , அதனை இந்தியாவுக்கு செலுத்துவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு சட்டமா அதிபருக்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது - என்றும் அவர் கூறினார். (ஐ)

### யாழ்.நகரில்...

ஒன்றுக்கு நேர்முக தேர்வுகாக இளைஞர் அழைக்கப்பட்டிருந்தார். இதற்காக, மோட்டார் சைக்கிளில் பயணித்துக் கொண் டிருந்தவரை பின்னால் வந்த லொறி முந்திச் சென்றது. அப்போது, இளைஞரை அது மோதித் தள்ளியது. தடுமாறி கீழே விழுந்த இளைஞரின்மீது லொறியின் பின் சில்லு ஏறியதில் அவர் சம்பவ இடத்திலேயே உயி ரிழந்தார்.

யாழ்ப்பாணம் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ஐ-03)

### அரசாங்கத்தின்...

தெரிவித்துள்ளார்.

பொதுஜன பெரமுனவின் தொகுதி அதிகார சபைக் கூட்டம் மாத்தறை - ஹக்மன தேர்தல் தொகுதியில் நடைபெற்றது. இதில், உரையாற்றியபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

சில முடிவுகள் நாம் கட்டாயம் எடுக்க வேண்டிய முடிவுகளாக இருக் கின்றன. சில முதலீட்டாளர்களுக்கு நாட்டை திறந்து விட வேண்டும். சில நிறுவனங்களுடன் நாம் மிகவும் திறந்த மனப்பான்மையுடன் பணியாற்ற வேண்டும்.

நாட்டின், ஏதேனும் ஒரு நிறுவனம் நட்டத்தில் இயங்கின்றது என்றால், அதனை இலாபமீட்டும் நிறுவனமாக மாற்றும் வேலைத்திட்டத்தை நடைமுறைப்படுத்த வேண்டும். அனைத்து விடயங்களையும் நடைமுறைப்படுத்தும் போது நாட்டுக்கு உகந்த வகையிலும் மக்களுக்கு உகந்த வகையிலுமான பொறிமுறையை கையாள வேண்டும்.

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ நாட்டை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவிடம் ஒப்படைக்கும்போது 6.8வீத பொருளாதார வளர்ச்சி காணப்பட்டது. மீண்டும் நாட்டை கோட்டாபய ராஜபக்ஷவிடம் ஒப்படைக்கும் போது 3 வீதத்துக்கும் குறைவான பொருளாதார வளர்ச்சியே காணப்பட்டது.

2020ஆம் ஆண்டுக்கு பின்னரே நாட்டில் பொருளாதார நெருக்கடி உருவானதாக சிலர் கூறுகின்றனர். எனினும், அதிகளவான கடனை நல்லாட்சி அரசாங்கமே பெற்றுக் கொண்டுள்ளது. இதனை நான் கூறவில்லை அநுரகுமார திஸாநாயக்க கூறுகிறார்.

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ போரை செய்து கொண்டு - நாட்டை அபிவிருத்தி செய்யப் பெற்றுக்கொண்ட கடனை போன்று சுமார் 4 மடங்கு கடனை நல்லாட்சி அரசாங்கம் பெற்றுள்ளது. இது எவருக்கும் மறைக்க வேண்டிய விடயமல்ல.

### கைபேசி...

பொருட்களின் இறக்குமதி கட்டுப்பாடும் தளர்ந்தது. இதனால், வரும் நாட்களில் இந்தப் பொருட்களின் விலைகள் குறைவடையும் என்று எதிர்ப்பார்க்கப்படுகின்றது. (ஐ)

### யாத்திரை...

உயிரிழந்தார்.

இந்த சம்பவம் குறித்து மேலும் அறியவருவதாவது,

தொண்டைமானாறு செல்வச்சந்நிதி ஆலயத்தில் இருந்து கதிர்காமத்துக்கான பாத யாத்திரை கடந்த 6ஆம் திகதி ஆரம்பமானது. இந்த யாத்திரிகர் குழுவில் உயிரிழந்தவரும் இடம்பெற்றிருந்தார்.

62 பேர் கொண்ட அந்த யாத்திரிகர் குழு நேற்று முன்தினம் ஞாயிற்றுக் கிழமை இரவு மட்டக்களப்பு மாமாங்கத்தை அடைந்தது. அங்கிருந்து நேற்று திங்கட்கிழமை காலை 6.30 மணியளவில் அவர்கள் யாத்திரையை தொடர முற்பட்டபோது முதியவர் திடீரென மயங்கி விழுந்து மரணமானார்.

மட்டக்களப்பு பொலிஸார் சம்பவ இடத்துக்கு சென்று விசாரணைகளை நடத்தினர். அத்துடன், சடலத்தை பிரேத பரிசோதனைகளுக்காக மட்டக்களப்பு போதனா மருத்துவமனையில் ஒப்படைத்துள்ளனர். (ஐ-02)

### வடக்கில்...

தேவையற்றது. புதிதாக விகாரைகளை நிர்மாணிப்பதை நிறுத்த வேண்டும். பௌத்தர்கள் இல்லாத தமிழ் மக்கள் வாழும் பகுதிகளில் புதிதாக விகாரைகளை அமைப்பது அவசியமற்றது. தையிட்டியில் அமைக்கப்பட்ட விகாரையும் தேவையற்றது. அது சட்ட விரோதமானது. தமிழ் மக்களுக்கு சொந்தமான காணியிலேயே அந்த விகாரை அமைக்கப்பட்டுள்ளது. எனவே, யாழ்ப்பாணத்தில் - வடக்கு மாகாணத்தில் புதிதாக விகாரைகள் அமைப்பது நிறுத்தப்பட வேண்டும் - என்றும் அவர் அந்த நேர்காணலில் கூறினார் (ஐ)

### கிளிநொச்சி...

கிளிநொச்சி பொது மருத்துவமனை யில் சேர்க்கப்பட்ட நிலையிலேயே உயிரிழந்தார்.

புதுக்குடியிருப்பிலிருந்து கிளிநொச்சி நோக்கி பயணித்த கப் ரக வாகனமும் கிளிநொச்சியிலிருந்து தருமபுரம் நோக்கி பயணித்த மோட்டார் சைக்கிளுமே நேருக்கு நேர் மோதுண்டு விபத்துக்கு உள்ளாகின என்பது குறிப்பிடத்தக்கது.

கிளிநொச்சி பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ஐ)

### இந்தியாவின்...

அனுப்பிவைத்த அறிக்கையிலேயே மேற்படி விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும், கடந்த 50 ஆண்டுகளாக கேள்விக்கு உட்படுத்தப்படும் இலங்கைத்தீவில் ஈழத்தமிழர்களின் பாதுகாப்பு சரத் வீரசேகர கூறுவதைப்போல பௌத்தர்கள் சட்டத்தை புதிதாக கையில் எடுக்க வேண்டிய தேவையில்லை. ஏற்கனவே, ஆசியாவின் நூல் சுரங்கம் யாழ்ப்பாணம் நூலகத்தின் மீது உங்கள் தீக்குச்சி எப்போது கொளுத்தி எறியப்பட்டதோ அப்போதே பௌத்தம் சட்டத்தை கையில் எடுத்து விட்டது. வெலிக்கடையில் குட்டிமணியின் கண்கள் தோண்டப்பட்டபோதும் - முள்ளிவாய்காலில் வகைதொகையின்றி ஈழத்தமிழினம் இனப்படுகொலை செய்யப்பட்டபோதும் இலங்கையின் சட்டத்தை கையகப்படுத்தியவர்கள் நீங்கள் தான்.

சிங்கள பேரினவாதத்தின் வக்கிர கோரதாண்டவம் ஆடும் அக்கினி குஞ்சுகள் நீங்கள்தான் என்பதை ஈழத் தமிழர்களும் சர்வதேச நாடுகளும் நன்கு அறியும். புதிய உலக ஒழுங்கில் நடத் தப்பட்ட மிக மோசமான பைபிளோகிளாசம் (Bibliosclasm) நிகழ்த்தியவர்கள் நீங்கள்தான்.

சிங்கள - பௌத்தம் தேரவாத மத அடிப்படைவாத சக்திகள் மற்றும் சிங்கள பெருந்தேசியவாத வாக்குகளால் உருவாக்கப்பட்ட இலங்கை அரசாங்கம் இதில் கோட்டாபய அரசும் விதிவிலக்கல்ல.

நாட்டில் ஏற்பட்ட பொருளாதார வீழ்ச்சியால் எந்த சிங்கள மக்கள் கோட்டாபயவை மற்றும் பொதுஜன பெரமுனவினரை யுத்த வெற்றி கதாநாயகர்களாகவும் சிங்கள இனத்தின் மீட்பர்களாக கருதினார்களோ அதே சிங்கள மக்களால் கோட்டாபய அரசு ஆட்சி அதிகாரத்திலிருந்து துரத்தி அடிக்கப்பட்டது.

நாட்டை பொருளாதார வீழ்ச்சியிலிருந்து மீட்க வந்த மீட்பராக ரணில் விக்கிரமசிங்கவும் உலக நாடுகளிடம் கடன்களை பெற்றுக்கொண்டபோது கொடுத்த வாக்குறுதிகளில் முக்கியமானது. தமிழ் மக்களுக்கான நிரந்தரமான அரசியல் தீர்வு, போர் குற்றவாளிகளிற்கு தண்டனை, பயங்கரவாத தடைச் சட்டம் நீக்கம். ஆனால், பொருளாதார வீழ்ச்சியிலிருந்து நாடு மீண்டு வருகின்றதான வெளித் தோற்றப்பாடு காட்டப்படுகின்ற வேளையில், இலங்கையின் வட, கிழக்கு மாகாணங்களில் ஈழத்தமிழர்களின் பூர்வீக நிலங்களில் மிகவேகமான பௌத்த மயமாக்கல் மற்றும் வட, கிழக்கு மாகாண வாழ் தமிழ் மக்களை அச்சுறுத்துவது போல் சிங்கள மத அடிப்படைவாத பாராளுமன்ற உறுப்பினர்களால் தமிழ் மக்களுக்கு மிரட்டல்கள் விடப்படுகின்றன.

சரத் வீரசேகர நிபந்தனைகள் தொடர்ந்தால் சிங்களவர்கள் சட்டத்தை கையிலெடுக்க வேண்டி வரும் என்ற எச்சரிக்கையை தமிழ் மக்களை நோக்கி விட்டிருந்தார்.

இலங்கை தீவில் தமிழ் மக்கள் இன்றுவரை அனுபவிக்கும் அத்தனை துயரங்களுக்கும் காரணம். சிங்கள - பௌத்த தேரவாத சிந்தனை கொண்ட அரசியலாகும். இதேஅரசியல்தான் இலங்கையின் பொருளாதாரத்தை அதல பாதாளத்தில் வீழ்த்தியது.

ரஷ்யா - உக்ரைன் போரும் அதன் பின்னரான சர்வதேச அரசியல் மாற்றங்கள், இந்திய கொள்கை வகுப்பாளர்கள் மத்தியில் பெரும் மாற்றங்களை ஏற்படுத்தியிருப்பதை இந்திய மத்திய அரசின் அண்மைக்கால நடவடிக்கைகள் மிகத் தெளிவாக எடுத்துக்காட்டுகின்றன.

இலங்கை ஜனாதிபதி ஒருபுறம் சர்வதேசத்துக்கு தமிழ் மக்களுக்கு அரசியல் தீர்வு கொடுக்கிறேன் என்று வாக்குறுதி கொடுத்து சர்வதேசத்தை ஏமாற்றிக் கொண்டு, மறுபுறம் சிங்கள - பௌத்த பேரினவாதிகளையும் சிங்கள இனவாத அரசியலையும் அனுமதிக்கிறாரா என்ற நியாயமான சந்தேகம் தமிழ் மக்களுக்கு எழாமல் இல்லை.

தொடர்ந்தும் பௌத்த பேரினவாத சக்திகள் தமிழ் மக்களின் வரலாற்று - பூர்வீக நிலங்களையும் வணக்க ஸ்தலங்களையும் பௌத்த மதத்தின் பெயரால் ஆக்கிரமிப்பு செய்து தமிழ் மக்களின் இருப்பையும் அச்சுறுத்தும் விதமான இனவாத நடவடிக்கைகள் தொடர்ந்தால், இந்திய - பசுபிக் பிராந்தியத்தில் ஒரு புதிய ஒழுங்கை நோக்கி இந்தியா பயணிக்கிறது. அந்த ஒழுங்கைப் பற்றிக்கொள்ள வேண்டிய யதார்த்தமான தேவை ஈழத்தமிழர்களுக்கு எழும், தவிர்க்க முடியாத சூழ்நிலையை உருவாக்கி உள்ளீர்கள்.

அப்படி பிராந்திய ஒழுங்கை பற்றிக்கொள்ளும் ஈழத்தமிழர்கள் பயணிக்கும்போது எமது தேசிய இனத்துக்கு எதிராக நீங்கள் பற்ற வைத்த இன அழிப்பு நெருப்புக்கும் மற்றைய எல்லா அக்கிரமங்களுக்கும் உலக அரங்கில் கை கட்டி சாட்சி சொல்ல வேண்டிவரும். அவ்வாறான இடர் மிகுந்த திருப்பத்துக்குள் சிங்கள தேசத்தை நீங்கள் தள்ளி செல்கின்றீர்கள் என்பதே காலத்தின் நிதர்சனமான உண்மை - என்று கூறியுள்ளார். (ஐ)

### யாழ்...

எதிர்கொண்டுள்ளனர். இது, கடந்த வருடம் ஜூன், ஜூலை மாதங்க ளில் இது 40 வீதமாகக் காணப்பட்டது. அப்போது, 60 ஆயிரம் மக்கள் மிகவும் மோசமான உணவுப் பாதுகாப்பின்மையை எதிர்கொண்டிருந்தனர். தற்போது அது 10 ஆயிரமாகக் குறைவடைந்துள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டது.

உணவுநுகர்வில் ஏற்பட்ட முன்னேற்றமே உணவுப் பாதுகாப்பில் ஏறபட்ட முன்னேற்றத்துக்குக் காரணம். இதே நேரம், உணவு விலைகள் குறைவடைந்தமை, அறுவடை காலத்தில் விவசாய சமூகத்தினர் மத்தியில் காணப்பட்ட முன்னேற்றம் என்பனவும் இதில் செல்வாக்கு செலுத்தின என்று ஐ. நாவின் அமைப்புகள் தெரிவித்துள்ளன.

எனினும், யாழ்ப்பாணம், கிளிநொச்சி, மட்டக்களப்பு, மன்னார், வவுனியா மற்றும் நுவரெலியா மாவட்டங்களில் உணவு பாதுகாப்பின்மை இன்னமும் உயர் மட்டத்திலேயே உள்ளது என்றும் ஐ. நா. அமைப்புகள் சுட்டிக்காட்டியுள்ளன.

மலையகத்தில் தோட்டத்தொழிலாளர்கள் மத்தியிலேயே அதிகளவு உணவுப் பாதுகாப்பின்மை காணப்படுகின்றது என்றும் அந்த அமைப்புகள் கூறியுள்ளன. (ஐ)

### மத நல்லிணக்க...

அதிபருடன் கலந்துரையாடி தேவையான நடவடிக்கைகளை உடனடியாக மேற்கொள்ளுமாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஜனாதிபதி அலுவலக பிரதானி, தேசிய பாதுகாப்பு தொடர்பான சிரேஷ்ட ஆலோசகர் சாகல ரத்நாயக்க நேற்று பணித்துள்ளார்.

வரலாறு காணாத பெரும் பொருளாதார ஸ்திரமின்மைக்கு நாடு முகம் கொடுத்த போது மத நல்லிணக்கத்தை சீர்குலைத்து மக்களிடையே பிளவை ஏற்படுத்தி நாட்டை மீண்டும் வீழ்ச்சியடையச் செய்யும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக ஜனாதிபதிக்கு கிடைத்த புலனாய்வு தகவல் மூலம் தெரியவந்துள்ளது.

இதுபோன்ற நாசகார செயல்களை கண்காணித்து, மத நல்லிணக்கத்தை சீர்குலைக்கும் விடயங்கள் சமூகத்தை சென்றடையும் முன்பே தடுக்கும் பொறுப்பு புதிதாக நிறுவப்பட்டுள்ள புதிய பொலிஸ் பிரிவு ஆகும் என்று தெரிவித்துள்ள தேசிய பாதுகாப்பு ஆலோசகர் சாகல ரத்நாயக்க ஜனாதிபதியின் பணிப்புரைக்கு அமைவாக புதிய பொலிஸ் பிரிவு மிக விரைவில் ஸ்தாபிக்கப்படும் - என்றார். (ஐ)

ஈழநாடு
Eelanadu

# இன, மத வெறுப்பை கக்கும் தேரர்களுக்கு எதிராகவும் இனி சட்டம் பாய வேண்டும்!

## மனோ கணேசன் எம். பி.



கொழும்பு, மே 30

"இன, மத வெறுப்பை கக்கி வரும் பௌத்த தேரர்களை நோக்கியும் சட்டம் இனி பாய வேண்டும்." _ என்று தமிழ் முற்போக்கு கூட்டணியின் தலைவரும் கொழும்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான மனோ கணேசன் தெரிவித்தார்.

"போதகர் ஜெரோம் பெர்னாண்டோ மற்றும் சமூக பேச்சாளர் நடாஷா எதிரிசிங்க ஆகியோருக்கு எதிராக அரசின் சட்டம், ஒழுங்கு விசாரணைகள் மற்றும் நீதிமன்ற நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுகின்றன. சட்டம், ஒழுங்கு, நீதித் துறை தன் கடமையை செய்யட்டும்.

அதேவேளை இந்நாட்டில் இன வாத வெறுப்பு பேச்சுகளை தொடர்ந்து இந்து, இஸ்லாம், கத்தோலிக்க மதங்களுக்கு எதிராக பேசி வரும் பௌத்த பிக்குகளை நோக்கியும் இதே சட்டம், ஒழுங்கு, நீதித்துறை பாய வேண்டும். எந்த வொரு மதத் தலைவரும் செயல்பாட்டாளரும் தமது இன வாத, மத வாத நடவடிக்கைள் தொடர்பில் இனிமேல் சட்டத்தின் முன் விலக்கு பெற கூடாது", என்று மனோ கணேசன் எம். பி. தனது டுவிற்றர் பக்கத்தில் தெரிவித்துள்ளார்.

பாஸ்டர் ஜெரோம், முற்போக்கு பேச்சாளர் நடாஷா ஆகியோரை சுற்றி வளைத்திருக்கும் பொலிஸ், நீதிமன்ற சட்டங்கள் இந்நாட்டில் இனவாத வெறுப்பு பேச்சுகளை தொடர்ந்து பேசி வரும் பௌத்த பிக்குமார்களுக்கு எதிராகவும் பயன்பட வேண்டும். இனிமேல் இந்நாட்டில், சட்டம் ஒருபக்க சார்பாக இருக்க முடியாது - என்றார். (ஐ)

# வடக்கும் மலையகமும் இணைந்து பயணிக்க வேண்டியது அவசியம்!

## அருட்தந்தை சக்திவேல்



யாழ்ப்பாணம், மே 30

வடக்கும் மலையகமும் ஒன்றாக இணைந்து பய ணிக்கவேண்டிய தேவையுள்ளது என்று அருட்தந்தை சக்திவேல் தெரிவித்துள்ளார்.

மலையக மக்களின் 200ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு யாழ்ப்பாணத்தில் கடந்த சனிக்கிழமை நடந்த நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றியபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

வட, கிழக்கு மக்கள் ஒருபோதும் போராட்டத்தை நிறுத்தவில்லை. வீதிகளில் நின்று போராடுகின்றனர். போராட்டம் உணர்வுபூர்வமானது. வட, கிழக்கு மக்களின் தற்போதைய அன்றாடப் பேச்சாக இனவழிப்பு, இனப்படுகொலை சர்வதேச நீதி, சர்வதேச குற்றவியல் நீதிமன்றம் போன்றன தொடர்ந்துகொண்டிருக்கின்றன.

இது வட, கிழக்குக்கு மட்டும் பொதுவான சொற்களல்ல. மலையகத்துக்கும் பொதுவான சொல். மலையக மக்களும் மிக நீண்ட காலமாக அமைதியான முறையிலே இன அழிப்புக்கு உட்பட்டுள்ளதுடன் தற்போதும் சந்தித்துக்கொண்டிருக்கின்றனர்.

1964ஆம் ஆண்டு சிறிமா - சாஸ்திரி ஒப்பந்தமும்கூட இனப்படுகொலை தான். ஒரே குடும்பத்தை சேர்ந்தவர்களை கண்முன்னே இழுத்துக்கொண்டு சென்று தகப்பன் இந்தியாவில் தாய் இலங்கையில் என பிளவுபடுத்தப்பட்ட வேதனை இன்னும் தொடர்ந்துகொண்டிருப்பதை காண்கின்றோம்.

200 ஆண்டு காலமாக தொடர்ந்தும் ஒரே பிரதேசத்தில் உயிர் வாழ முடியாத நிலை உருவாகியுள்ளது. அவர்கள் வசிக்கும் நிலம் அவர்களுக்கு சொந்தமில்லாமல் காணப்பட்டாலும். 1940ஆம் ஆண்டிலிருந்து புதிய புதிய குடியேற்றத் திட்டங்கள் அமைக்கப்படுகின்றன. தொடர்ந்தும் ஒரே இடத்தில் வாழும் மக்களுக்கு நிலம் சொந்தமில்லை என்றால் அதுவும் ஒருவகையில் இனவழிப்புத்தான்.

நாங்கள் முள்ளிவாய்க்காலில் பிணங்களையும் எலும்புக்கூடுகளையும் கடந்து வந்த வரலாறுண்டு. 1890ஆம் ஆண்டளவில் கோப்பித் தோட்டம் முற்றாக அழிவடைந்த வேளையில் இவர்களுக்கு சம்பளம் கொடுக்க கையிலே பணமில்லை. இதனால் பட்டினியில் விழுந்து சாகின்றார்கள். இறந்தவர்கள் ஆங்காங்கே வீசி எறியப்பட்டார்கள். இவ்வாறான சம்பவங்களை எல்லாம் இனவழிப்பு என கூற முடியும். எனவே, இனவழிப்பு இனப்படுகொலை என்ற சொல்களுக்கு மத்தியிலே வடக்கும் மலையகமும் ஒன்றுசேர்ந்து ஒன்றாக பயணிக்க வேண்டிய தேவையுள்ளது - என்றார். (ஐ)

# மக்கள் எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்களை கையாள்வது தொடர்பில் உரையாடல்

யாழ்ப்பாணம், மே 30

பொதுமக்களின் எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்களை கையாளுதல் தொடர்பில் அரசாங்க மற்றும் சட்டத்தை அமுலாக்கும் அதிகாரிகளுக்கு சிபாரிசு செய்யப்படும் பரிந்துரைகள் தொடர்பான கலந்துரையாடல் யாழ்ப்பாணத்தில் நடைபெற்றது.

இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ்ப்பாண பிராந்திய அலுவலகத்தின் ஏற்பாட்டில் நேற்று திங்கட்கிழமை யாழ்ப்பாண பிரதேச செயலகத்தில் நடைபெற்றது.

பொது மக்களின் எதிர்ப்பு போராட்டங்களை கையாள்வதில் அரச மற்றும் சட்ட அமுலாக்க அதிகாரிகளுக்கு இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு பரிந்துரைக்கப்பட்ட வழிகாட்டுதல்களை மே 12ஆம் திகதி கொழும்பில் வெளியிட்டது.

பிராந்திய மட்டத்தில் இந்த வழிகாட்டுதல்களை அறியப்படுத்துவதும் மற்றும் பங்கேற்பாளர்களிடமிருந்து கருத்துகளை பெற்று இவ்வழிகாட்டுதலை மெருகேற்றுவதும் கலந்துரையாடலின் நோக்கமாக காணப்பட்டது. (ஐ)

# ஏலக்காய் திருடிய மூவர் கைதாகினர்

கொழும்பு, மே 30

கொழும்பு துறைமுக வளாகத்துக்குள் வைக்கப்பட்டிருந்த கொள்கலனை உடைத்து அதிலிருந்த ஏலக்காய் பெட்டிகளை திருடினர் என்ற குற்றச்சாட்டின் கீழ் மூவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

திருடப்பட்ட ஏலக்காய்களின் பெறுமதி 25 இலட்சம் ரூபாய் என மதிப்பிடப்பட்டுள்ளது.

கொழும்பு - இப்பலோகம மற்றும் பண்டாரகம பகுதிகளைச் சேர்ந்த 40 வயதுக்கு உட்பட்ட மூவரே சம்பவம் தொடர்பில் கைது செய்யப்பட்டனர்.

சந்தேகநபர்களால் திருடப்பட்ட ஏலக்காய்கள் கைப்பற்றப்பட்டுள்ளன.

சந்தேகநபர்களை புதுக்கடை நீதிவான் நீதிமன்றத்தில் முற்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று பொலிஸார் தெரிவித்தனர்.



# இலங்கைக்கு வருமாறு நடிகர் ரஜினிக்கு அழைப்பு

## இலங்கை துணைத் தூதுவர் விடுத்தார்

சென்னை, மே 30

நடிகர் ரஜினிகாந்தை இலங்கைக்கு வருகை தருமாறு தென்னிந்தியாவுக்கான துஇலங்கை துணைத்தூதுவர் கலாநிதி டி. வெங்கடேஷ்வரன் நேரில் அழைப்பு விடுத்துள்ளார்.

நேற்றைய தினம் மரியாதை நிமிர்த்தமாக நடிகர் ரஜினிகாந்தை அவரின் போயஸ் கார்டன் இல்லத்தில் துணைத் தூதுவர் சந்தித்து பேசினார்.

இந்தச் சந்திப்பின் போது இரு நாடுகளுக்கு இடையிலான சுற்றுலா மற்றும் கலாசார துறைகளை மேம்படுத்துவதற்கான வழிமுறைகள் குறித்து இருவரும் ஆலோசித்தார்கள்.

அத்துடன், துணைத் தூதுவர் வெங்கடேஷ்வரன், ரஜினிகாந்தை இலங்கைக்கு வருகை தருமாறு அழைப்பு விடுத்தார். இதன் மூலம் தமிழகம் - இலங்கை இடையே நட்புறவு வலுப்படும் - என்றும் கூறினார்.

ரஜினிகாந்த் ஒரு சிறந்த ஆன்மிகவாதி என்பதால், ராமாயண யாத்திரையில் தொடர்புடைய புனித தலங்களையும் இதர பாரம்பரிய கலாசார மற்றும் மத சின்னங்களை பார்வையிடவும் இரு நாடுகளின் திரைப்படம் சார்ந்த சுற்றுலாவை ஊக்குவிக்கவும் இலங்கை வருமாறு வெங்கடேஷ்வரன் அழைப்பு விடுத்தார். மேலும் அவர், ரஜினிகாந்தை இரு நாட்டின் நட்பை கருதி சென்னையில் உள்ள இலங்கை துணைத் தூதரகத்துக்கு வருகை தருமாறும் அழைப்பு விடுத்தார் - என்று துணைத் தூதரகம் விடுத்த செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டது. (ஐ)

# அதிகாலைவேளை வீட்டுக்குள் புகுந்த கும்பல் அடாவடித்தனம்

வவுனியா, மே 30

வீடொன்றுக்குள் நுழைந்த குழு வீட்டின் பிரதான வாயிலையும் வீட்டின் கதவுகள், யன்னல்களையும் அடித்து சேதப்படுத்திவிட்டு தப்பிச் சென்றது.

நேற்று அதிகாலை வவுனியா - மரக்காரம்பளை பகுதியில் இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

வீட்டின் உரிமையாளர்கள் யாரும் இல்லாத சந்தர்ப்பத்தில் இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

சம்பவம் தொடர்பில் வீட்டு உரிமையாளரால் நெளுக்குளம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது.

இதேவேளை அருகில் உள்ள கண்காணிப்பு கமெராவில் தாக்குதல் மேற்கொண்ட நபர்கள் தொடர்பான காட்சிகள் பதிவாகியுள்ளன. இதை அடிப்படையாகக் கொண்டு விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ஐ)

# கொளுத்திய பட்டாசை சோதித்தவர் அது வெடித்ததில் உயிரிழந்தார்!

கொழும்பு, மே 30

திருமண நிகழ்வொன்றில் இளைஞர் கொளுத்திய பட்டாசு வெடிக்காததால் அதை பரிசோதித்த போது, பட்டாசு திடீரென வெடித்ததில் அவர் உயிரிழந்தார்.

கொழும்பு - தம்புத்தேகம பகுதியில் இடம்பெற்ற இந்த சம்பவத்தில், லக்மால் ஜயதிலக என்ற 31 வயது இளைஞரே இவ்வாறு உயிரிழந்தார்.

எரியாத பட்டாசை பரிசோதித்துக் கொண்டிருந்தபோது, அது திடீரென வெடித்து இளைஞன் காயங்களுக்கு உள்ளானார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

விபத்தில் தலையில் பலத்த காயமடைந்த இளைஞன் தம்புத்தேகம மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட போது உயிரிழந்தார் என்று பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

இந்த விபத்து தொடர்பான மேலதிக விசாரணைகளை தம்புத்தேகம பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ஐ)

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 30.05.2023 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.